# வெளிச்சம்

பங்குனி: 1995 விலை: 25/=





விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம்


- தமிழீழத் தேசியத் தலைவர்
- அடேல் ஆன்
- ப. புஸ்பரட்ணம்
- பொ. தாசன் - நேர்காணல்
- செம்பியன் செல்வன்
- செங்கை ஆழியான்
- செ. பொ. சிவனேசு
- சு. சங்கிலிகுமாரன்
- புதுவை இரத்தினதுரை
- கருணாகரன்
- சிவஞானம் ஜெயசங்கர்
- இயல்வாணன்
- கலை, இலக்கிய கருத்தரங்கக் காட்சிகள்

சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம்

அழகான உங்கள்கண்கள் ஒளியிழந்தால்

வாழ்க்கை எங்கே?

கள் வாழ்வை மீட்டுத் தருகிறது லாவண்யா

☐ அழகானவை ☐ தரமானவை

லாவண்யா
மூக்குக் கண்ணாடிகள்

☐ உறுதியானவை ☐ வெண்மையானவை

லாவண்யா செயற்கைப் பற்கள்

பல், கண் சம்பந்தமான சகல பிரச்சனைகளுக்கும்
தீர்வு கிடைக்குமிடம்

லாவண்யா

பல், மூக்குக் கண்ணாடி அகம்

175, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்

V.T. அன் சன்ஸ்
317. மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்
(எழிலகம் முன்)

கிளை:
காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்
(இலங்கை வங்கி அருகில்)

பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்று
28 - 3 - 1995

# வெளிச்சம்

கலை, இலக்கிய சமூக இதழ்

☐ வெளியீடு:
விடுதலைப்புலிகள்
கலை, பண்பாட்டுக்கழகம்

☐ உருவாக்கம்:
ஆசிரியர் குழு

☐ ஓவியங்கள்:
தயா, கோபாலி

☐ அச்சு:
ம. மரியதாஸ்

☐ இதழமைப்பு:
இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்

☐ படங்கள்:
'பேபி போட்டோ'

தொடர்புகட்கு:
"வெளிச்சம்"
விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக்கழகம்
நடுவப்பணியகம்
கோண்டாவில்,
தமிழீழம்.

## தலைவாசல்

இதழ்: 38 பங்குனி: 1995

''எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டு''. 1995 மார்ச் மாதம் 3, 4, 5ம் தேதிகளில் நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபம் மேற்சொன்ன கவிதை வரிகளை உண்மையென்று உணர்த்தி நின்றது.

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகமும், வெளிச்சமும் இணைந்து நடாத்திய கலை, இலக்கியக் கருத்தரங்கையே தமிழீழம் இப்படி விதந்துரைத்தது. யாழ்ப்பாணம், வன்னி, முல்லை, மன்னார் என்று வட தமிழீழத்தின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் என்றுமில்லாத உணர்வுடனும், உற்சாகத்துடனும், தேடலுடனும் ஆயிரத்துக்கு மேற்பட்ட அறிஞர்களும், படைப்பாளிகளும், ஆர்வலர்களும் வந்து கூடினர். மூன்று நாட்களும் பன்னிரண்டு அமர்வுகளாக கலை, இலக்கியத்தின் பல கூறுகளையும் ஆழமாகவும், விரிவாகவும் அலசி ஆய்வுகள் நிகழ்த்தினர். அனைவரும் கூடிக் கலந்துரையாடிக் கொண்டனர். வெகு ஆர்வத்துடன் மூன்று நாட்களும் எல்லோரும் கூடியிருந்தது உண்மையில் உள்ளத்தை உற்சாகப் படுத்தியுள்ளது. தாயகத்தின் விடுதலைக்காகப் போராடும் ஒரு தேசத்தின் மனச்சாட்சியின் குரலாக ஒலிக்க வேண்டிய கலை, இலக்கியவாதிகளை ஒன்றிணைத்ததில், இக்கருத்தரங்கு பயன்பாடடைந்துள்ளது.

இலக்கைத் தெரிந்து கொண்ட தெளிவுடன் கருத்தரங்கு பெரு வெற்றியுடன் நிறைவு பெற்றது. இனி, படைப்பாளிகளிடமிருந்து செயற்பாட்டை வெளிச்சம் எதிர்பார்த்து நிற்கிறது. ☐☐

# வாழ்க்கையின் நிதர்சனத்திலிருந்து அந்நியப்படக் கூடாது

"கலை இலக்கியப் படைப்புகள் மக்களை சிந்திக்கத் தூண்ட வேண்டும். பழமையிலும், பொய்மையிலும் பல்வேறு மாயைகளிலும் சிறைப்பட்டுக் கிடக்கும் மக்கள் மனதில் புரட்சிகரப் பார்வையை தோற்றுவிக்க வேண்டும். மாறி வரும் சமூக விழிப்புணர்வை உருவாக்க வேண்டும்.



தமிழீழத் தேசியத்தலைவர்
**திரு. வே. பிரபாகரன் அவர்கள்**

நாம் இன்று ஒரு புரட்சிகரமான யுகத்தில் வாழ்கிறோம். பூகம்பமான மாற்றங்கள் உருவாகி வரும் புதியதொரு சகாப்தத்தில் வாழ்கிறோம். தமிழீழ மக்கள் இன்று விடுதலை வேண்டிப் போர்க்கோலம் பூண்டு நிற்கிறார்கள். எமது தேசிய வாழ்வின் சகல பரிமாணங்களிலும் வியாபித்து நிற்கும் ஒரு வரலாற்று இயக்கத்திலிருந்து கலைஞர்களும், அறிஞர்களும் அந்நியப்பட்டு நிற்க முடியாது. அப்படி அந்நியப்படுவது மக்களில் இருந்தும் வாழ்க்கையின் நிதர்சனத்திலிருந்தும் அந்நியப்படுவதாக முடியும்.

இந்தக் காலகட்டத்தில் கலைஞர்கள், எழுத்தாளர்கள், அறிஞர்கள் ஆகியோரிடமிருந்து நான் கூடிய அளவு பங்களிப்பை எதிர்பார்க்கிறேன். ஒரு தாயகத்தைக் கட்டியெழுப்பும்பணி புனிதமானது. இந்தப் புனிதப் பணியில் பங்கு கொள்வது எல்லோரதும் தேசியக்கடன். ஆயிரமாயிரம் போராளிகளின் அற்புதமான தியாகத்தில் உருவாகி வரும் எமது தாயகத்தை ஒரு உன்னதமான, மேன்மையான சமுதாயமாக மாற்றியமைக்க வேண்டும். இந்த சமூக மாற்றத்திற்கு வழிகோலும் வகையில் சிந்தனையாளர்களும் சிருஷ்டிகர்த்தாக்களும் எமது இயக்கத்திற்கு பக்கபலமாக நின்று பணியாற்ற வேண்டும்"

யாழ்ப்பாணம்
நல்லூர் பிரதேச நூலகம்

நேற்றடித்த மஞ்சள் வெய்யிலும்
உடல் வருடிய இளவேனிலும்
இன்றேன் இல்லாமற் போயின?
பருவம் தவறாத மாரியும்
பூம்பனியும்
பொய்த்துப் போனதேன்?
முற்றத்தில் பூச்சொரிந்த வேம்பின்
துளிர்கருகி,
இலைகருகி,
கிளைகளில் ஈரம்வற்றி
வேர்கள் கூடக் காய்ந்து கிடக்கிறதே.
வைகாசி மாதத்துக் குயில்கள் எங்கே?
தட்டிவிட்டுப் படுக்கக்கூடிய தார்வீதிகள்
அம்மைத்தழும்பு முகமானதேன்?
அம்மன் கோவில் அசையாமணிக் கோபுரம்
ஏன் இடிந்துளது?
சிரித்தபடி கையசைத்துப் போகும்
அந்தச் சீருடைச் சிறுவனின்
வலதுகரமேன் மொட்டையானது?
கூப்பிட்ட குரலுக்கு குரைக்கின்ற
நாய்களைக் கூட யார் கடத்தினர்?
எவரிடமாவது கேட்கலாமென்றால்
வீதியெல்லாம் வெறிச்சோடிக் கிடக்கின்றன.
அகலத் திறந்து கிடக்கும் படலைகளை
எவன் பூட்டினான்?
அன்று.......
நான் வெளியேறியிருக்கக் கூடாது.
வெளியேறியிருக்கவே கூடாது.

— மாலிகா —



விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகமும்
வெளிச்சமும் இணைந்து நடாத்திய

## நெஞ்சைவிட்டகலாத மூன்று நாள்

# கலை, இலக்கியக் கருத்தரங்கு

விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக்கழகமும், வெளிச்சம் கலை, இலக்கிய சமூக இதழும் இணைந்து மார்ச் 3, 4, 5ம் திகதிகளில் நல்லூர் இளங் கலைஞர் மன்றத்தில் நடத்திய மூன்று முழுநாள் கலை, இலக்கியக் கருத் தரங்கு தமிழீழ கலை இலக்கியத்திலும், இலக்கிய கர்த்தாக்கள், கலைஞர்களி டத்திலும் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பது மறுக்கவியலாதது.

மாபெரும் என்று சொல்லத்தக்கதாக பெரும் செலவையும் உழைப்பையும் உட்செலுத்தி இக்கருத்தரங்கு நடந்து முடிந்திருக்கிறது.

கலையும், கலையுடன் இணைந்த வாழ்வும் எங்களுடையது. அந்த வாழ்வு டன் இணைந்த கலையும், இலக்கியமும் செம்மை பெற்று அறிவியல் தத்து



இடமிருந்து வலமாக **கலை, இலக்கியக் கருத்தரங்கில்** உரையாற்றிய தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன், விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப் பாளர் திரு. புதுவை இரத்தினதுரை, விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் திரு. வே. பாலகுமாரன், விடுதலைப் புலிகளின் வெளியீட்டுப் பிரிவுப் பொறுப்பாளர் திரு சு. ரவி ஆகியோர்.

வார்த்தத் தளங்களில் நின்று, சமூக வாழ்வைச் செவ்வனே பார்த்துணர்ந்து நிற்பவையாக உச்ச வளர்ச்சி பெறவேண்டும் என்ற எண்ணத்தின் பிரதிபலிப்பே இக்கலை இலக்கியக் கருத்தரங்கின் பாடுபொருளாக அமைந்து இருக்கிறது. ஈழத்துக்கலை இலக்கியங்களை நல்லதொரு ஆரோக்கிய நிலைக்கு இட்டுச் செல்ல வேண்டுமென்ற வெளிச்சத்தினதும் கலை, பண்பாட்டுக்கழகத்தினதும் எதிர்பார்ப்பின் விளைவே இக்கருத்தரங்கு எனலாம்.

இக்கருத்தரங்கில் வன்னி, முல்லை, மன்னார் மாவட்டங்களில் இருந்து நானூறு பேராளர்கள் மிகுந்த ஆர்வத்துடன கலந்து கொண்டனர். யாழ் மாவட்டத்தின் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவகக் கோட்டங் களில் இருந்து ஆயிரத்துக்குமேலான பேராளர்களும்ஆர்வலர்களும்வந்திருந்தனர்.

தூர இடப் பேராளர்களுக்கு போக்குவரத்து, தங்குமிடம், உணவுமற்றும் இதர வசதிகள் செய்து தரப்பட்டன .கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களுக்கு மதிய உணவு, சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன.

அத்துடன் கலை இலக்கியவாதிகள் யாவரும் காணும்பொருட்டு, தமிழ்த் தாய் பதிப்பகம் மற்றும் விடுதலைப்புலிகளின் வெளியீட்டுப் பிரிவினர் தமிழீழ வெளியீடுகள் கொண்ட கண்காட்சியொன்றை நடத்தினர். விடுதலைப்புலிகளின் அனைத்துலகத் தொடர்பகத்தினர் தமிழீழம் தொடர்பான வெளிநாட்டு நூல் கள், சஞ்சிகைகள், பிரசுரங்கள், சுவரொட்டிகள் அடங்கிய கண்காட்சியினை வைத்தனர். அத்துடன் தயா, கோபாலி, மாற்கு, இராசையா, வாசுகி, செம் மலையான் ஆகிய ஈழத்து ஓவியர்களின் ஓவியக்கண்காட்சியொன்றும் நடத்தப் பட்டது.

இவை மட்டுமல்ல;

''தமிழகத்தில் எமது அறிஞர்கள் நாடுகடத்தப்பட்டு, அவமானப்படுத்தப் பட்டபோதே இக்கருத்தரங்கை நடத்தவேண்டும் என்ற முனைப்பு ஏற்பட்டது''



இடமிருந்து வலமாக வண.பிதா பிரான்ஸிஸ் ஜோசவ் அடிகள், பேராசிரியர் அ. சண்முகதாஸ், கலாநிதி நா. சுப்பிரமணியன், முதறிஞர் திரு. சொக்கன், பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோர்.



இடமிருந்து வலமாக யாழ்–பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் திருமதி.நாச்சியார் செல்வநாயகம், முல்லைமணி வே. சுப்பிரமணியம், திரு. இளையவன், கவிஞர் விவேக், திரு. ஐ. சாந்தன் ஆகியோர்.

எனக் கலை,பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை அவர்கள் கூறியிருப்பதும் இக்கருத்தரங்கின் பெறுமானத்தைச் சுட்டப் போதுமானது.

முதல்நாள் அரங்குக்கு மூதறிஞர் சொக்கன் தலைமை வகித்தார். வெளிச்சம் சஞ்சிகையின் ஆசிரியர் சி. கருணாகரன் வரவேற்புரை நிகழ்த்த, யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி. நா. சுப்பிரமணியன் முதலுரை நிகழ்த்தினார். 'வாழ்வியலுடன் இணைந்த நாவல்கள்' பற்றி செம்பியன் செல்



இடமிருந்து வலமாக வெளிச்சம் ஆசிரியர் சி. கருணாகரன், ஓவியர் தயா, ஓவியர் கோபாலி, திரு. இணுவையூர் சிதம்பரதிருச் செந்திநாதன் ஆகியோர்.



இடமிருந்து வலமாக திருமதி. கோகிலா மகேந்திரன், திரு. நா. யோகேந்திரநாதன், குழந்தை ம. சண்முகலிங்கம், திரு. த. கலாமணி; திரு. செம்பியன் செல்வன் ஆகியோர்.

வன் உரையாற்ற, இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் கருத்துரைத்தார். 'வாழ்வியலுடன் இணைந்த அரங்கியல்' குறித்து குழந்தை ம. சண்முகலிங்கம் உரைநிகழ்த்த, திரு. த. கலாமணி கருத்துரை நிகழ்த்தினார். 'வாழ்வியலுடன் இணைந்த ஓவியங்கள்' என்ற பொருளில் திரு. மு. இராதாகிருஸ்ணன் (கோபாலி) உரையளிக்க, திரு. தி. தயானந்தம் (தயா) கருத்துரையளித்தார். தமிழர் பாரம்பரியமும் பண்பாட்டு மாற்றங்களும் பற்றி திருமதி. கோகிலா மகேந்திரன் உரையாற்றினார். தொடர்ந்து பேராளர்களுக்கும், உரையாளர்களுக்குமிடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.



இடமிருந்து வலமாக கலாநிதி சபா. ஜெயராசா, கலைப் பேரரசு ஏ. ரீ. பொன்னுத்துரை, சங்கீத பூஷணம் க. கணபதிப்பிள்ளை, திரு. க. சட்டநாதன் ஆகியோர்.




இடமிருந்து வலமாக **கவியரங்கில் பங்கேற்ற கவிஞர்களான** தில்லைச்சிவன், இ. முருகையன், சோ. பத்மநாதன், சா. வே. பஞ்சாட்சரம், ந. வீரமணி ஐயர், வீ. பரந்தாமன், காரை செ. சுந்தரம் பிள்ளை ஆகியோர்.

இரண்டாம் நாள் அமர்வுக்கு வண. பிதா பிரான்ஸிஸ் யோசவ் அடிகள் தலைமை வகித்தார். விடுதலைப்புலிகள் உறுப்பினர் திரு. வே. பாலகுமாரன் தொடக்கவுரையையும், யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் முதலுரையினையும் நிகழ்த்தினர்.

வாழ்வியலுடன் இணைந்த பாரம்பரிய கலைவடிவங்கள், வாழ்வியலுடன் இணைந்த சிறுகதைகள் பற்றி முறையே முல்லைமணி வே. சுப்பிரமணியம், (தொடர்ச்சி 7ம் பக்கம்)





கருத்தரங்கில் ஓவியம் பற்றிய அமர்வு



கலந்து கொண்ட கவிஞர்களுடன் போராளிகள்.



பேராளர்களும் போராளிகளும் உணவருந்துகின்றனர்.



கலந்து கொண்டவர்களில் ஒருபகுதியினர்.



கலந்து கொண்டவர்களில் இன்னொரு பகுதியினர்.

(ஒற்றுரு: மாறன் பதிப்பகம்)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.



திரு. க. பாலநடராஜன் (இளையவன்) ஆகியோர் உரைகளையும், கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை, திரு. க. சட்டநாதன் ஆகியோர் கருத்துரை களையும் வழங்கினர். உலக விடுதலைப் போராட்ட இலக்கியங்கள் பற்றி திரு. ஐ. சாந்தனும், போராட்டகால வாழ்வைப் பிரதிபலிக்கும் கலை, இலக்கியங்கள் பற்றி கவிஞர் இ. முருகையனும் எடுத்துக்கூறினர். கலந்துரையாடலும் இடம் பெற்றது.

இறுதி நாள் நிகழ்வுக்கு யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி. நாச்சியார் செல்வநாயகம் தலைமை வகித்தார். விடுதலைப்புலிகளின் வெளி யீட்டுப் பிரிவுப் பொறுப்பாளர் சு. ரவி தொடக்கவுரையையும், தமிழீழ அரசி யல்துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் சிறப்புரையையும், யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி முதலுரையையும் வழங்கினர்.

வாழ்வியலுடன் இணைந்த கவிதைகள் பற்றி, கலாநிதி சபா. ஜெயராசா வும், கவிஞர் விவேக்கும், வாழ்வியலுடன் இணைந்த இசைபற்றி, சங்கீதபூஷ ணம் சு. கணபதிப்பிள்ளை, இயலிசைவாரிதி ந. வீரமணிஐயர் ஆகியோரும் உரை மற்றும் கருத்துரைகளை வழங்கினர். திரு. நா. யோகேந்திரநாதன் 'பரந்துபட்ட மக்களுக்கான கலை இலக்கியம்' பற்றிப் பேசினார்.

வாழ்வுக்கும் கலை இலக்கியங்களுக்கும் இடையிலான தொடர்பு என்ன? அவை எவ்வெக் காலங்களில் எவ்வாறெவ்வாறெல்லாம் கலை இலக்கியங்களில் அமையப்பெற்றன? இன்றைய எமது வாழ்வியலை இவை எங்ஙனம் பிரதிபலித் துள்ளன? என்ற வினாக்களுக்கு ஓரளவு விடைதந்தமையில் 'வாழ்வியலுடன் இணைந்த...' கருத்துரைகள் குறிப்பிடத்தக்கன.

இறுதியில் - மூத்த கவிஞர்கள் ந. வீரமணிஐயர், பண்டிதர் வீ. பரந்தாமன் சா. வே. பஞ்சாட்சரம், இ. முருகையன், சோ. பத்மநாதன், காரை செ. சுந் தரம்பிள்ளை ஆகியோர் கவிஞர் தில்லைச்சிவன் தலைமையில் தம் 'நெஞ்சில் குடியிருக்கும் நினைவுகளை'க் கவிதையில் சுவைபடச் சொல்லினர்.

கவிஞர் புதுவை இரத்தினதுரை இக்கருத்தரங்கத்தின் நோக்கம், பயன், எதிர்பார்ப்பு என்பனவற்றைத் தம் நிறைவுரையிலே வெளியிட்டார்.

இக்கருத்தரங்கு சில பணிகளைச் செய்து முடித்திருக்கிறது. ஒருமித்த தொடர்பற்று இருந்த கலை, இலக்கியவாதிகளை ஒன்று சேர்த்தமை; தமிழீ ழக் கலை இலக்கியங்களை நாடிபிடித்துப் பார்த்து, அதன் செல்நெறியைச் செப்பனிட முனைந்தமை; இங்கு முகிழ்ந்து வரும் கலை இலக்கியங்கள் பற்றிய தொரு மதிப்பீட்டிற்கான அடிப்படையை ஏற்படுத்தியமை; ஆரம்பப் படைப் பாளருக்குச் சில வழிப்படுத்தல்களைச் செய்தமை; தமிழக அரசால் தமிழா ராய்ச்சி மாநாட்டிற்குச் சென்ற சமயம் நாடுகடத்தப்பட்ட ஈழத்தறிஞர்களுக் குக் கௌரவமளித்து 'வீட்டு முற்றத்து மரமே இதந்தரும்' எனக் காட்டியமை என்பன குறிப்பிடத்தகுந்தவை.

கலை இலக்கியவாதிகள் பலருடன் அளவளாவும் போது, அவர்கள் கூறிய கருத்துக்கள் இக்கருத்தரங்கு விளைவித்த சமூகப்பயனை அளக்கப் போதுமானது. குறிப்பாக – வன்னி, முல்லை, மன்னார் மாவட்டக் கலைஞர்களை இக் கருத்தரங்கு வழிப்படுத்தியிருக்கிறது; பல விடயங்களைத் தெளிவாக்கி வைத்திருக்கிறது.

துப்பாக்கி சிணுங்கும்; பீரங்கி புலம்பும். அதன் நடுவே கலை இலக்கியம் படைத்த கலைஞர்கள், இலக்கிய கர்த்தாக்கள் ஒன்று சேர்ந்து கலந்துகொண்ட இந்நிகழ்வில்–

ஈழத்துக் கலை இலக்கியங்கள் கலை நேர்த்தியும், சமூக அக்கறையும் மிக்கனவாக, தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் ஏற்படுத்திவரும் சமூக பண்பாட்டு மாற்றங்களைத் துல்லியமாக எடுத்துக்காட்டுவனவாக, சரியான திசை வழியில் செல்வனவாக அமையவேண்டும்; அத்தகையதொரு பரிணாமத்துக்கு எமது கலை இலக்கியங்கள் பாய்ச்சலடைய வேண்டும் — என்ற வேண்டுகை விடுக்கப்பட்டுள்ளது. இதனை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு கலை, இலக்கியப் படைப்பாளர், விமர்சகர், வாசகர் யாவரையும் சார்ந்தது.

**இயல்வாணன்**


கண்கவர் கவர்ச்சி
மனம்மகிழும் மிளிர்ச்சி

அறுவடைக் காலமல்லவா
உங்கள் ஆவல் எமக்கு புரியும்.

22 கரட் அசல் தங்க நகை
உற்பத்தியாளர் நாம்
புதுப்புது டிசைன்களில் ஆபரணங்கள்
உறுதியுடன் செய்திட

விரையுங்கள்.........

மிதுர்சன் நகைத்தொழிலகம்
துணுக்காய் வீதி - யோகபுரம், மல்லாவி.

சிறுகதை

## செமியன்செல்வன்



# நிலம்.. வீடு.. வாசல்

செல்லாச்சி தன் பேரனை ஒரு கையிலும், மூட்டை முடிச்சுக்களை தலையிலும் சுமந்தவாறு வளவை விட்டு, வெளியே வந்தாள். சங்கடப்படலை 'படார்' என அடித்து மறுப்புத் தெரிவிப்பதுபோல் சாத்திக் கொண்டது. இருளோடு இருளாக மக்கள் நகர்ந்து கொண்டிருப்பது அரவங்களிலிருந்து புலனாகியது. வளவில் அவிழ்த்து விடப்பட்ட ஆடு,மாடுகள் காலம் தெரிந்தோ தெரியாமலோ 'ம்மே! ம்மா! .. ' எனக் குரல் கொடுக்க, கோழிகள் சடசடத்துக் கூவின.

முன் வைக்க எடுத்த கால்கள் ஒருகணம் தயங்கின. நெஞ்சம் குளிர் காற்றைமேவி ஒருகணம் நடுங்கியது.

சப்த தீவுகளைப் பாதுகாப்பதென, பகைவனுக்குப் பயம் காட்டிக்கொண்டு ஆழ்ந்த அமைதியில் கடல் பரந்து விரிந்து.. கடலோரப் பூரசுகளினால் மக்களுக்கு அபயம் காட்டிக் கொண்டிருக்க, தூரத்தே மின்மினிப் பூச்சிகளான மின்சார விளக்குகள் கடலிலும் கரையிலும் பகைவரின் இருப்பினைக் கூறிக் கொண்டிருந்தன. இருளில் யாரோ கூறிக்கொண்டு போனார்கள் 'விரசா போ புள்ளை ..... நேரத்துக்கு பெருங்குள அம்மன் கோவிலைப் போய்ச் சேந்திட வேணும்.... ஆமி...... காரைநகரிலயிருந்து வெளிக்கிட்டு ஊர்காவற்றுறைக்கு வந்திட்டுதாம்.. புங்குடுதீவுச் சனத்தையும் பொடியள் இப்போதைக்கு வெளிக்கிடச் சொல்லிப் போட்டினமாம்... பெரிய அடிபாடுதான் நடக்கப் போகுது ..... இடையில பெடியளுக்கு நாங்க இடையூறாக இருக்கக் கூடாது...''

செல்லாச்சி மீண்டும் ஒருமுறை படலையால் எட்டிப்பார்த்தாள். பரந்து விரிந்த முற்றத்துமாமரமும்... வீடும் கடும் நிழலென இருளில்..... 'எங்களை இப்படி அநாதையாக விட்டுவிட்டுப் போறியா?' என்பது போல் சோகம் கொண்டு நிற்பதென அதிர்ந்தாள்.

வீடு என்றால் இன்று நேற்றைய வீடா? முப்பாட்டன் காலத்து வீடு. நாற்சாரவீடு. சுண்ணாம்பு, கோழி முட்டையின் சிவப்புக்கரு, பனங்களி, சர்க்கரை கலந்து கற்கள் கட்டப்பட்ட வீடு.. தாராளமாக ஒராள் விழாமல் படுத்தெழும்பக்கூடிய அகலமான சுவர்கள்... கோடையும் மாரியும் அந்தச்சுவர்களால் வடிகட்டப்பட்டு 'வீங்கிள வேனிலாக' ச் சுகம் கொடுக்கும்... வாசலில் வேப்பமரநிலை கன அடி தடிப்பு... முற்றிலும் சிற்பச் செடி வேலை ... கதவில் பித்தளையிலான 'பளபள'க்கும் கைப்பிடி.. திறப்பு அரைக்கிலோ நிறை நிலையின் இருபக்கச் சுவர்களிலும் சிறு

விதானமாய் உட்குழிந்த மாடங்கள்... அக்காலங்களில் அகல் விளக்கேற்றியிருப்பார்கள். இன்று 'சிக்கன விளக்கு' சுடற்காற்றுக்கு மாலையில் கண் விழிக்கும்..வெளிநடையின் இரு புறங்களும் நீண்ட திண்ணைகள். ஒவ்வொரு திண்ணையிலும் ஒவ்வொரு குடும்பம் வாழலாம்..நடைபாதையில் பதிக்கப்பட்ட பட்டைக் கற்கள்... நடந்து நடந்து மெருகேறிப் பளபளக்கும்.

'இந்த வீட்டை விட்டுப் போறதா... இப்படிப் பத்தாள் படுத்தெழும்பக் கூடிய கூடத்தையும் வீடு வாசலையும் விட்டுப் போறதா......'

– அவளின் நெஞ்சம் துவண்டது.

கால்கள் பின்னின. கையை விட்டு நழுவ முயன்ற பேரனை இருளிலும் பாய்ந்து பற்றினாள். நடக்கத் தொடங்கினாள்.

''இந்த இருட்டுக்க உன்னவிட்டிட்டு எங்க போய் நான் தேடுறது?... உன்ர அப்பன் இப்படியே? அவன் பெயருக்குத்தான் மருமோன்... என்ர சொந்தப்பிள்ளை கூட அப்படியிருக்கமாட்டுது. வாய்க்கு வாய் மாமா மாமியெண்டு என்னில உசிரையே வைச்சிருந்தான்... நான் கொடுத்து வைச்சது அவ்வளவுதான்.எவ்வளவு கண் நிறைஞ்ச குடும்பம். நான் அதுக்குச் சீதனமா என்னத்தைக் கொட்டிக் கொடுத்தன்? இந்த வீடு வாசலும் . நாலைஞ்சு பவுண் நகையும் தான . அவர் அதுகளை எட்டாப் பத்தாப் பெருக்கினார் .. இப்ப இருக்கிற இருபத்தைந்து பரப்புக் காணியும் புகையிலைத் தோட்டமும் அவற்ற சம்பாதிப்புத்தான... டிராக்டர் என்ன .. மோட்டச் சயிக்கிள் என்ன எல்லாம் போச்சு எல்லாத்தையும் அந்த நாசமாப் போனவங்கள் காட்டிக்கொடுத்து அழிச்சாங்களே... அந்த அறுவான்கள்... ஆமிக்கு எங்கட வயல், வெளி... பாதை எல்லாம் தெரியுமே... எல்லாம் எங்கடயவங்கள் சொல்லிக்கொடுக்காமலே அவன் வங்களா வடியால வந்திருப்பான்..?'

- அவள் நடை துரிதமடைந்தது.

முந்தியும் இப்படித்தான் .. திடுக்கெண்டு வந்திட்டாங்கள் . பொடியளுக்கும் விளங்கேல்ல... எங்க பிசகு நேந்தது வெண்டு... வந்தவங்கள் எல்லாரையும் கோயில்களுக்கு போகச் சொன்னார்கள்... என்னையும் இவனையும் முதலில போகச் சொல்லி விட்டு பின்னால வாறம் எண்டு புருஷனும் பொஞ்சாதியுமா நிண்டிச்சினம்... மருமோனும் மகளைப் போகச் சொல்லி போ...! போ...! எண்டு துரத்தினவர்தான்... ஒரு பொஞ்சாதியானவள் அப்படி நிண்டு போடுவாளே... அப்ப இவனையும் கொண்டு கோயிலுக்குப் போனவள்.. பேந்து பின்ன அதுகளைக் கண்ணில கண்டனா...?

எல்லாரையும் வீட்டுக்குப் போகச் சொல்லி திரும்பிவந்த போது வழியெல்லாம் யார் யாரோ எரிந்துகரியான காட்சியைத்தான் கண்டம்...... நான் கண்டனா?... என்ர புள்ளையளும் இச்சாம்பலில கிடப்பினமெண்டு?'

அவளுள் ஆத்திரம் கனல்கிறது. அவள் அறியாமலே வேகம் கூடுகிறது.

'வீடு வாசல் திறந்து கிடக்கிறது. டிராக்டர்... மோட்டர் சையிக்கிள் எதுவுமேயில்லை... பெட்டகம் அடித்துத் திறக்கப்பட்டு' ...

என்ர புள்ளைகளைக் காணமுடியவில்லை.

'நாலைந்து நாளைக்குப் பின்னால பாக்கிறன் என்ர மருமோன்ர மோட்டார் சைக்கிளை ஆரோ ஒரு விடுகாலி ஓடிக் கொண்டு போகிறதை ..... நான் பின்னால ஓடினன். அவன் எங்க ஓடிமறையிறது... எல்லாரும் அவனைப் போய்ப்பிடிச்சுக்

கேட்டா... ஒண்டும் தெரியாது எண்டு சொல்லிச் சிரிக்குது மூதேவி என்ர மருமோன் புள்ளை பற்றி இன்றுவரை ஒரு தகவலுமில்லை...

இப்ப... இப்ப மீண்டும் அந்தப் பரதேசியள் வந்திட்டுது...

தூரத்தே ஷெல்லடி கேட்கத் தொடங்கியது

'ஆச்சி... கெதியாப் போவமணை மற்றாக்கள் ஓடினமெணை'

- இருட்டுக்குள் தடம் பார்த்து கற்கள் இடற மூட்டை முடிச்சுக்களுடன் அவள் வேகம் கொள்கிறாள். பேரனின் நடையில் ஒரு துடிப்பும் துள்ளலும் இருப்பதைப் பார்த்து, மெள்ள... மெதுவாப்போ... விழுந்து விடப்போறாய்...' யாரோ அருகாக நகர்கிறார்கள். ஏதோ மாம்பழ வாசனை.

- 'ம்... வாசல்மாமரம் காய்க்கத் தொடங்கீட்டுது... அது என்ன இன்றைய நேற்றைய மரமா...? அந்த வீடு கட்டும்போது வைத்த மரம் எண்டு என்ர அப்புவுக்கு அவற்ற அப்பு சொன்னதெண்டு சொல்வார்... அப்படியெண்டா என்ன வயதிருக்கும்...... ஏன் இப்படி ஓடுறம்...... எங்கட நிலம் வீடு...... வாசல் எல்லாவற்றையும் விட்டு... யாருக்குப் பயந்து ஓடுறம்... ஒண்டுமே புரியவில்லையோ... ஆர்... ஆரைத் துரத்துவது...? எங்கட நிலம், வீடு, வாசலுக்கு ஆர் உரிமை கொண்டாட வரப்போகிறான்...?

- ஷெல் ஒன்று அருகாமையில் எங்கோ வெடித்துச் சிதறுகிறது.

நடையில் வேகம் அதிகரிக்கிறது.

'எந்தப் பெரிய மரம்! நாலாள் சேர்ந்து கட்டிப் பிடிக்க வேண்டும் கறுத்தக் கண்டுப் பழங்கள் அதையும் ஒரு நாள் மசிர் வந்து விலைக்குக் கேக்குது எதை எதற்கு விலை பேசிறது எண்டு இப்ப ஒருத்தருக்கும் தெரியுதில்லை... விலை பேச முடியாத விசயங்களும் கனக்க இருக்கு.. அது வந்து விறகுப்பஞ்சத்துக்கு விலைபேசுது......

- ஷெல் தொடர்ந்து வந்து விழுந்தவண்ணமிருக்கிறது.

- ஓட்டமும் நடையுமாக இருளில் தட்டுத்தடுமாறி முன்னேறினார்கள். இவர்கள் தலைக்கு மேலால் குண்டுகள் பறந்தன. அழுகை... ஓலம் அவலம் பயம்.. விரக்தி., ஆத்திரம் ..... தாகம் தவிப்பு தண்ணீர் .. இதற்கிடையில் பரந்தவெளிகளில் பொடியள் ஒரு கையில் ஆயுதமும்.. மறு கையில் மக்களுக்கான குடிநீருமாக அலைபாய்ந்து கொண்டிருந்தார்கள்.

- பெருங்குள அம்மன் கோயில் ஜனநெரிசலில் திக்குமுக்காடியது. அம்மன் கர்ப்பக்கிருகத்தில் இருந்து மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். பாலுக்காக அழும் பாலகர்களின் அழுங்குரலில் அவள் தனது பாலமுதப் பொற்கிண்ணத்தில் பாலொழுகுவதுபோல் மெல்லிய ஒளியில் சிலிர்த்துக் கொண்டிருந்தாள். இருளிலிருக்கும் மக்களுக்கு என்னால் இது மட்டும் தான் முடியும் என்பது போல் மெல்லியதான ஒளி மண்ணில் பரவுகிறது. மக்கள் பயணத்தைத் தொடருகிறார்கள்.

- தூரத்தே கேட்ட ஷெல்லடிகள் அருகே கேட்கத் தொடங்கின. மக்களின் நகர்வும்...... காலநேரம் புரியாமல் தெரு நாய்களும் வீட்டுக் காரரைப் பிரியமுடியாமல் பின் தொடரும் வீட்டு நாய்களும் ஒன்றையொன்று 'உர்' என்று உறுமி ... குலைத்து .. கடித்து குதறி மக்களால் விரட்டி குழந்தைகளின் அழுகை ... சிணுங்கல் ..... பொருட்கள் விழும் ஓசை..

- பொடியள் எதிரிக்கு பதிலடி கொடுத்துக்

கொண்டே மக்களைப் பாதுகாத்து அனுப்பப்பாடு படுகிறார்கள். அவர்மேனி தோள்பட்டை காலின் ஆடு சதைகளில்... இரத் தக்கறைகளுடன்... தூங்கா விழிகளுடன்.

- செல்லம்மா இவை யெல்லாம் பார்த்து தவித் துக் கொண்டிருந்தாள். யாரோ ஒருவரைக் காயம் பட்ட நிலையில் தூக்கிவரு கிறார்கள்... கூட்ட நெருக் கடிக்குள்ளும் இடம் ஒதுக்கி... முதலுதவி வழங் கப்படுகிறது...

- இதெல்லாம் ஏன்?... ஏன்?...

முந்தி இங்க இருக்க முடியாது என்று ஓடின ஆமி.. இப்ப ஏன்?... ஏன்?... அவள் நினைப்பு வாய் வழியாக வந்துவிடு கிறது—

முதலுதவி வழங்கிக் கொண்டிருந்த பொடியன் அவளை நிமிர்ந்து பார்க் கிறான்...

''நல்ல கேள்வி தான் அம்மா.. எங்கட குடா நாட்டிற்குள்ள பகைவன் வாற வழியெல்லாத்தை யும் அடைச்சாச்சு இப்ப கடல் பாதையைத்தான் நம்புகிறான்... கடனீரேரிப் போக்குவரத்துப் பாதை யை அடைக்கிறதெண்டால் வேலணை... புங்குடுதீவு காரைநகரைக் கைப்பற்ற வேண்டும் எண்டு நினைக் கிறான் ஏன் எங்கட வேலணை தான் அவங்கட முயற்சியைத் தடுக்கிறது .. மக்கள் கடனீரேரியில் பய ணம் செய்யும் பொழுது அவன் நாகதேவன்துறை, ஆனையிறவு, பூநகரியிலி ருந்து வெளிக்கிட்டு வந்து பொது மக்களைக் கடலி லேயே கொலை செய்து விட்டு தலைமைக் காரியா லயத்திற்கும், சிங்கள மக்க ளுக்கும் புலிகளைக் கொன்று விட்டோம் என்று கணக்குக் காட்டுகிறான்... ஆனால் அதைத் தடுக்க .. எந்த நேரமும் வேலணைப் பகுதியிலிருந்து 'சக்கை வண்டி' புறப்பட்டால் போதும்... ஆனையிறவும் போச்சு... நாகதேவன் துறையும்போச்சு இதால எங்கட தீவுகளைக் கைப் பற்றத் துடியாய்த் துடிக் கிறான்... அவனுக்கும் எங் கட ஆக்களில் சிலபேர் வழி காட்டுகினம் தங்கட பெற்றோர் .. சுற்றத்தா ரைக்கூட அகதிகளாக்கி மகிழத்துடிக்கினம்... இது ஒரு நாளும் நடக்க விட மாட்டோம். எங்கட உட லில கடைசித்துளி உயிர் இருக்கும்வரை இந்த மண்ணை மீட்டெடுத்தே தீருவோம்.. இது ஆமிக்கும் தெரியும். வாறவன் கொஞ்ச நாளில திரும்பு வான். பாருங்கள் நீங்க ளும் உங்கட மண்ணுக்குத் திரும்புவீர்கள்..''

- செல்லாச்சி அந்தப் போர் வீரனையே வைத்த கண் மூடாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''மெள்ள... மெள்ள மாக வெளிக்கிடுங்கள். அவன் ஷெல்லடி திசையை நாங்கள் பதிலடி கொடுத்து மாற்றிக் கொண்டிருக்கி றோம் .. எல்லாரும் மண் கும்பான் பிள்ளையார் கோவிலடிப்பக்கமாக நட வுங்கள்...'' — யாரோ கட்டளையிடுகிறார்கள்.

- அம்மன் கோவிலை விட்டு மக்கள் நிலம் தெரி கிற மெல்லிய ஒளியில் நகர் கிறார்கள். மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்துக் கொண்டே போர்வீரர்கள் அலை பாய்ந்து கொண் டிருக்கிறார்கள். காயப் பட்டவர்களும் .. காயப் படாதவர்களுமாக, காயப் பட்டவர்களையார்யாரோ தூக்கிக் கொண்டு ஓடிவரு கிறார்கள் ...

வெட்டவெளி..'கவர்' எடுக்க இடமோ பதுங்க வழியோ அற்ற வெட்ட வெளி. மேனி எங்கும் ஆறாகப் பெருக ..

அவர்களைப் பார்க்கப் பார்க்க செல்லம்மாவின் நெஞ்சில் ஈரம் சுரக்கிறது..

அவர்கள் நடந்து கொண்டே இருக்கிறார் கள்.........

கடல் சமீபிக்கிறது .. அங்கும் கூக்குரலும் ..... அழுகுரலும்... அழைப்பின் ஓசையும்.. ...

போட்களில் காயம் பட்டவர்களும் .. சிறுகுழந்தைகளும் ஏற்றப்படுகிறார்கள்......

மற்றவர்கள் நடந்து கொண்டே......

அவர்கள் பாதையின் இருமருங்கிலும் ஷெல்கள் வந்துவிழுந்துகொண்டே ... அவள் பேரனை நெஞ்சோடு நெஞ்சாக இழுத்து அணைத்துக் கொள்கிறாள்... தலையில் பெட்டி பெரும் சுமையாகக் கனக்க பயணம் தொடருகிறது...

கடல் அவர்களுக்கு ஆறுதல் சொல்ல முனைவது போல் மெல்லிய கடலலை அரவமின்றி கரை மோதுகின்றது......

நடை... .. நடை ..... தூரத்தே கோட்டை .... தண்ணீர்த் தாங்குக் கோபுரம் . நகர ஒளி எல்லாம் தெரியத்தெரிய .

ஏதோ விடிவுக்கு வந்ததுபோல் .....

அந்தச் சங்கிலிப் பாலத்தடியில்கூட்டம்ஸ்தம்பித்து நிற்கிறது.

சங்கிலிப்பாலம் உடைக்கப்பட்டு... அந்த இடத்தில் ஓடுங்கிய மின்சாரக் கம்பங்கள் அடுக்கப்பட்டு தற்காலிக பாதையாக. .. ஆனால் மக்கள்'அங்கால'ப் பக்கம் போய்விட வேண்டும் என்ற துடிப்பாலும், தங்கள் சாமான்களை, விழுந்துவிடாமல் கொண்டு போய் விட வேண்டும் என்ற ஆத்திரத்தாலும் -- ஒருவரை ஒருவர் இடிக்க பலரின் பொருட்கள் பாலத்தடி நீரில் விழுகிறது..... நீர் ஆற்று வேகம் கொண்டு ஓடுகிறது .. சிலர் தாங்கள் கொண்டு வந்த சைக்கிள் போன்றவற்றை கயிற்றில் கட்டி பாலத்தடி நீரில் அக்கரையில் நின்று இழுத்துக் கொண்டிருந்தனர். இதேபோல பாரமான பொருட்கள் இவ்விதம் கரையேற .....

''எங்க போக வேணும்.. எங்க தங்கப் போகிறீர்கள் தங்க இடமில்லை என்றால் எங்களுடன் வாருங்கள் .. ஒண்டுக்கும் பயப்படாதீர்கள் — என்ற குரல்கள் எங்கும் கேட்டுக்கொண்டிருக்கின்றன. குண்டுச் சப்தங்களின் ஒலி மெல்லியதாய் கேட்கின்றது... குளிர்ந்த காற்று முகத்தில் படீரென அடிக்கிறது.

நிம்மதியான பெருமூச்சு அவளில் எழ, சூரியனும் பிரமையுடன் கிழக்கே எழத் தொடங்குகிறான்.

□□

தரமென்றால் அது இங்கே...
உங்களுக்குகந்த வகையில்

- பலசரக்கு மளிகைப் பொருட்கள்
- பள்ளிக்கூட பாவனைப் பொருட்கள்
- பால் மாவு வகைகள்
- கால்நடைத் தீனிகள் அனைத்துக்கும்

நாடுங்கள்:-

**த. திருஞானசம்பந்தர்**

பலசரக்கு வாணிபம்
பிரதான வீதி, வட்டுக்கோட்டை.

கவிதை

கருணாகரன்

## ஒற்றைக் குரலின் சப்தம்

இரத்தத்தில் நின்று பல்லிளிக்கிறது
கண்ணீரைத் துடைக்கும் வகையறியாச் சாலை.
சதாவெறுமையில் நின்றழுகின்றன விருட்சங்கள்
புன்னகையும் கீதமுமில்லை என்ற துக்கம்
வேர்களில் வடிந்திறங்க
நின்றழுகின்றன விருட்சங்கள்.
அதன் முதற்காலத்தில்
அது எல்லா உலகங்களையும்
தன்னுடன் வைத்திருந்து இறுமாந்த தெருத்தான்.
பூச்சூடி அலங்கரித்து
போதும் போதும் என்ற மயக்கத்தில்
அது இராப்பகலென்றில்லாது விருந்தெல்லாம் வைத்தது.
பிறகு,
எல்லாம் சுடுகாடாயிற்று.
இரத்தச் சிதிலமும் சிறகின் துடிப்பும்
விருட்சங்களைக் கதறவைத்தது
மல்லாந்து இறந்து கிடந்தது சாலை.
ஒரு குருவி இடம்தேடிவந்து விருட்சமொன்றில்
மோதி வீழ்ந்தது
ஷணத்தில் அது எல்லாவற்றையும் பார்க்கும்படியும் ஆனது.
ஷணத்திலேயே அதன் கண்கள் உருகி அழிந்தன.
இற்றுப்போன விருட்சத்தில் மோதிய பட்சியின் சிறகுகளும் கருகின.
இறந்துபோன சாலையில் இற்றுப் போகும் மரங்களில்
பட்சியின் துயரம் எதிரொலிக்கிறது.

# போருள் நானும் என்னுள் போரும்

சிவஞானம். ஜெயசங்கர்

கவிதை
(1)

இது அமைதிக்காலம்
ஆகாயத்தில்
விமானங்கள் போய்வருகின்றன.
ஆனால்
குண்டுகளைப் பொழிவதில்லை
'ஹெலி' கள் இறங்கிவந்து
பேசிவிட்டுப் போகின்றன.
தினமும் இரவும் வருகின்றது.
ஆனால்
பீரங்கிகள் முழங்குவதில்லை
"கிரேக்கர்களிடமிருந்து
அன்பளிப்பாயினும் அவதானமாயிருங்கள்"
சிங்களவரிடமிருந்து
சமாதானமாயினும் அவதானமாயிருங்கள்.
வரலாற்றுத் தெருவில்
கிழித்தெறியப்பட்ட உடன்படிக்கைகள்
காற்றுக்குப் பறந்து கொண்டிருக்கின்றன.
மூன்றாவது ஈழப்போர் வரை
பத்திரிகைகளில்
"சமாதானம்" வந்து கொண்டிருக்கும்.

கவிதை
(2)

தொட்டுக் கொள்ளும் தூரத்தில்
தொடமுடியாது தவிக்கும்
காதலரின் கரங்களாய்
தவித்துக் கிடக்கிறது
கேரதீவு - சங்குப்பிட்டிப் பாதை
இமைப் பொழுதின் கடப்பிற்கு
கால்கடுக்கும் காத்திருப்பு
இரவும் பகலும்;
பனியும் மழையும் வெயிலும்;
எல்லாமும்
ஒன்றாகி வழியும் காலம்.

ஒருவர்: எங்கிருந்து வருகிறது இந்த வாசனை!

மற்றவர்: முத்தையா வெதுப்பகத்தில் இருந்துதான்

## உங்கள் இடைநேர உண்டிகளான

- வெதுப்பி
- சீனி வெதுப்பி
- பிஸ்கட் வகைகள்
- பணிஸ் வகைகள்
- கேக் வகைகள்

யாவற்றையும்

சுவை மிக்கனவும்

தரம் மிக்கனவுமாகத்

தருகிறார்கள்.

**முத்தையா வெதுப்பகத்தினர்!**

**என்றும் நினைவில் வையுங்கள்**

## முத்தையா வெதுப்பகம்

கொழும்புத்துறை.

*'ஈழத்தமிழர் வரலாறு' என்ற பொருளில் யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை விரிவுரையாளர் திரு. ப. புஷ்பரட்ணம் அவர்கள் எழுதும் கட்டுரை வெளிச்சம் இதழில் தொடராக வருகிறது. இந்தத் தொடரின் இரண்டாம் பகுதியின் தொடர்ச்சி இந்த இதழில் பிரசுரமாகிறது.*

3

# ஈழத்தமிழர் வரலாறு

ப.புஷ்பரட்ணம்

வரலாற்றின் தொடக்க காலத்தில் இருந்து மொழி அடிப்படையில் இரு இனங்கள் (தமிழ், சிங்களம்) வாழ்ந்ததற்கான சான்றுகள் இலங்கையிற் காணப்படுகின்றன. இதன் தொடக்க காலச் சான்றுகளாக கி. மு. 3ஆம் நூற்றாண்டிற்குரிய பிராமிச் சாசனங்கள் கொள்ளத்தக்கன. இதுவரை கிடைத்த சாசனங்களில் சில தமிழ்மொழியிலும், பல பிராகிருத மொழியிலும் எழுதப்பட்டுள்ளன. இப்பிராகிருத மொழியில் இருந்தே பிற்காலத்தில் சிங்கள மொழி உருவாக்கம் பெற்றது. இதனால் மொழி அடிப்படையில் சிங்கள மொழியைக் காட்டிலும் தமிழ் தொன்மையானதெனக் கூறமுடியும். மகாவம்சம் கூட கி. மு. 1 ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் இருபத்திரண்டு மன்னர்கள் அநுராதபுரத்தில் ஆட்சிபுரிந்ததாகக் கூறுகிறது. இவர்களுள் பத்து மன்னர்களைத் தமிழர்கள் எனக் கூறும் இந்நூல் ஏனைய மன்னர்களை எந்த இனத்துக்குரியவர் எனக் கூறவில்லை. ஆனால் மொழி அடிப்படையில் பிராகிருதம் வடஇந்திய மொழிகளையும் தமிழ் தென்னிந்தியத்திராவிட மொழிகளையும் ஒத்துள்ளன. இதனால் வரலாற்றறிஞர்களில் பலர் பிராகிருத மொழிக்கும் (Proto Sinhala) வட இந்திய மொழிகளுக்கும் இடையிலான ஒற்றுமையைச் சுட்டிக்காட்டி மகாவம்சம் கூறும் வட இந்தியாவில் இருந்து ஏற்பட்ட விஜயனின் குடியேற்றத்தை சிங்கள இனத்தின் வருகையாக நியாயப்படுத்தினர். இதன் மூலம் கி. மு. 1ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் அநுராதபுரத்தில் ஆட்சி புரிந்த பன்னிரண்டு மன்னர்களையும் சிங்கள இனத்துக்குரியவர்கள் என அடையாளம் கண்டனர். அதன் அடிப்படையிலேயே எல்லாளனை வெற்றி கொண்ட துட்டகாமினியை சிங்கள இனத்தின் விடுதலை வீரனாக சித்திரித்தனர்.

ஆனால் மொழி அடிப்படையில் இரு இனங்கள் தோன்றமுன்னர் இவர்கள் பொதுப்பட்ட கலாசாரத்தின் வழிவந்தவர்கள் என்பதையும், அக்கலாசார மக்கள் மகாவம்சம் கூறும் காலப்பகுதிக்கு முன்னரே நாகரிகமுடைய மக்களாக வாழ்ந்தனர் என்பதையும் அண்மைக்காலங்களில் இலங்கையில் பரவலாகக் கிடைத்த சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. இந்த மக்கள் யார்? எங்கிருந்து குடியேறினார்கள்? எப்போது குடியேறினார்கள்? என்பன முக்கிய கேள்வியாகும். மானிடவியலாளர் இற்றைக்கு ஐம்பதாயிரம் வருடங்களுக்குமுன்னர் இலங்கையில் மக்கள் வாழ்ந்ததற்கான மனிதச் சுவடுகள் இல்லையெனக் கூறுகின்றனர். இதனால் இலங்கையின் ஆதிக்குடிகள் இன்னொரு நாட்டில் இருந்து புலம்பெயர்ந்திருக்க வேண்டும் என்பதே பொதுவான உண்மையாகும். அந்நாடு தென்னிந்தியா என்பது தொல்லியலாளரின் பொதுவான கருத்தாகும்.

## மனிதனின் கூர்ப்பும் இலங்கையின் முதல் மனிதர்களும்

இதுவரை தொல்லியலாளருக்கு கிடைத்துள்ள சான்றுகளின்படி மனிதன் என்ற அந்தஸ்தினைப் பெற்ற ஹோமோ ஹபிலிஸ் (வல்லமை வாய்ந்த மனிதன்) என்பவனது எச்சங்கள் ஆபிரிக்காவில் உள்ள தான்சானியாவிலும் எதியோப்பியாவிலும் கிடைத்துள்ளன. இவை ஏறத்தாழ முப்பது இலட்சம் வருடங்கள் பழமை வாய்ந்தவையெனக் கணிப்பிடப்பட்டுள்ளன. இம்மனிதர்களே உலகில் பழமை வாய்ந்த பழங்கற்கால மனிதர்கள் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. காலஓட்டத்தில் மேலும் பழமை வாய்ந்த மனிதர்களை உலகின் பல பாகங்களில் சந்திக்கிறோம். ஹோமோ ஏறக்டஸ் (நிமிர்ந்த மனிதன்) எனப்படும் மனிதன் ஆறு இலட்சம் வருடங்களுக்கு முன்னர் ஐரோப்பாவில் இருந்து சீனா வரை வாழ்ந்துள்ளான். கைக்கோடரிகள் எனப்படும் கற்கருவிகளை இவர்கள் உபயோகித்தனர். இன்றைய மனிதனோடு ஒப்பிடக்கூடிய ஹோமோ ஸப்பியன்ஸ் எனப்படும் சிந்தனை வாய்ந்த மனிதனது எச்சங்கள் 35000 ஆண்டுகள் பழமை வாய்ந்தவையாக கிடைத்துள்ளன.

மனிதனது வரலாற்றில் இம்மாற்றம் ஏற்பட்டு வரும்பொழுது புவியின் வரலாற்றிலும் பல மாறுதல்கள் இடம்பெற்றன. பிலிஸ்ரோசின் என புவியியல் வரலாற்றியலாளரால் அழைக்கப்படும் இக்காலப்பகுதியில் நான்கு தடவைகள் உலகின் பல பாகங்கள் துருவப்பகுதியில் இருந்து பெருகி வந்த பனிப்படர்வுக்கு இலக்காகின. நான்காவது பனிப்படர்வு 12,000 வருடங்களுக்கு முன்னர் பின்வாங்கிச் சென்றதாகக் கூறப்படுகிறது. இப்பனிப்படர்வு நிகழ்ந்த காலத்தில் கடல் மட்டம் குறைந்திருந்தமையால் நிலப்பாகங்களின் வழியாக அக்கால மனிதர்கள் தாம் முன்னர் வாழ்ந்திராத இடங்களுக்குப் புலம் பெயர்ந்தனர். இவ்வாறே இன்று ரஷ்யாவின் கிழக்குகோடியிலுள்ள காம்ரட்ச்காகுடா நாட்டிலிருந்து வடஅமெரிக்காவின் மேற்கு கோடியிலுள்ள அலாஸ்கா குடாநாட்டிற்கு அமெரிக்க செவ்விந்தியர்கள் புலம் பெயர்ந்தனர். பல உயிரினங்களும் புலம் பெயர்ந்தன. ஐரோப்பாவிலிருந்து பிரித்தானியத் தீவுகட்கு முதல் மனிதர்கள் புலம்பெயர்ந்தமையும் இவ்வாறே நடைபெற்றது. இலங்கையின் முதல் மனிதர்களும் இறுதிப் பனிப்படர்வின் போது இராமரணைப் பகுதியில் இருந்திருக்கக் கூடியதொரு நிலப்பாகத்தின் வழியாக தென்னிந்தியாவில் இருந்து புலம் பெயர்ந்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

பனிப்படர்வு முடியும் தறுவாயில் உலகின் பல பாகங்களில் ஏற்பட்ட காலநிலை மாறுதலினாலும், மனிதன் இயற்கையாகவே அடைந்து வந்த தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாகவும் அவனது வாழ்க்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் [illegible] நூலகம்.



கை முறை வேகமாக மாறத்தொடங்கியது. வில், அம்பு போன்ற பொறிகள் அறியப்பட்டமையால் மிகச்சிறிய அம்புநுனி போன்ற கருவிகளை உபயோகிக்கத் தொடங்கினான். இக்காலத்தில் காட்டுப் புற்களாகத் தோன்றிய பயிர்களிலிருந்து தானியங்களை அறுக்க சிறிய பிளேட் போன்ற கல் அலகுகளை உபயோகித்தான். இக்காலத்தினையே தொல்லியலாளர் இடைக்கற்காலம் அல்லது குறுனிக்கற் காலம் என அழைப்பர். இக்காலப் பண்பாட்டோடு இலங்கையின் மனித நாகரிக வரலாறு தொடங்குவதை இலங்கையின் பல பகுதிகளில் கிடைத்த தொல்லியற் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

## மகாவம்சமும் மனிதநாகரிகத்தின்தோற்றமும்

மகாவம்ச ஆசிரியர் தான் வாழ்ந்த காலத்திற்கு முற்பட்ட 1000 ஆண்டுகால (கி. மு. 6 — கி. பி. 4) வரலாற்றைக் கூறியுள்ளார். இவ்வரலாற்றில் சிங்கள மக்களின் மூதாதையினர் வட இந்தியாவில் இருந்துவந்த ஆரியரின் வழித்தோன்றல்கள் எனவும், புத்தருக்குப் பின் பௌத்தமதம் தழைத்தோங்கும் புனிதபூமி இலங்கை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அந்த நோக்கோடே இந்த வரலாறு எழுதப்படுகிறது எனவும் மகாவம்ச ஆசிரியர் சூசகமாகத் தெரிவித்துள்ளார். இதன் அடிப்படையில் இலங்கையின் நாகரிக வரலாறு கி. மு. 6ஆம் நூற்றாண்டளவில் வடஇந்தியாவில் இருந்து வந்த விஜயன் கூட்டத்தாரோடு ஆரம்பிப்பதாகவும், இவர்களே இலங்கையில் நீர்ப்பாசன விவசாயம், இரும்பின் உபயோகம், அரச அமைப்பு என்பவற்றை ஏற்படுத்தியதாகவும் இந்நூல் கூறுகிறது. விஜயன் வருகைக்கு முன் இங்கு இயக்கர், நாகர் எனப்படும் மக்கள் வாழ்ந்தாலும் அவர்கள் நாகரிகமற்ற அமானுஜர்கள் என இந்நூல் மேலும் கூறுகிறது.

இலங்கையின் வரலாறு பற்றிய ஆய்வின் தொடக்க காலத்தில் மகாவம்சம் கூறும் காலப்பகுதிக்குரிய வரலாற்றை அறிவதற்கு பிற ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. இதனால் மகாவம்சம் கூறுவதே உண்மை வரலாறு என வலியுறுத்தப்பட்டது. இதையுறுதிப்படுத்தும் வகையில் பிற்காலத்தில் வடஇந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பண்பாட்டு உறவு பற்றிய சான்றுகளை வடஇந்தியாவில் இருந்து ஏற்பட்ட ஆதிக்குடியேற்றத்தின் தொடர்ச்சியென நியாயப்படுத்தினர். பேராசிரியர் பரணவிதான விஜயன் குடியேற்றத்திற்கு முன்னர் இலங்கையில் வாழ்ந்தவர்கள் மனிதப்பிறவிகள் அற்ற அமானுஜர்கள் எனவும் அவர்களை மனிதர்களாகக் கொண்டாலும், திராவிட மக்களாகக் கொள்ள முடியாதென அடித்துக் கூறினார். இலங்கையின் புகழ்பூத்த வரலாற்றறிஞர்களில் ஒருவரான மெண்டிஸ் மகாவம்சம் கூறும் விஜயனது குடியேற்றம் வெறும் கட்டுக்கதை எனக் கூறினாலும், இலங்கையின் நாகரிக வரலாறு சிங்கள மக்களின் வருகையோடுஏற்பட்டதென நியாயப்படுத்தினார். ஆனால் இன்று இக்கருத்துக்களை பெரும்பான்மைச் சிங்கள மக்கள் போற்றும் நிலையில் இருந்தாலும், வரலாற்றறிஞர்களில் பலர் ஏற்கும் நிலையில் இல்லை. இதற்கு கடந்த இரு சகாப்தங்களாக இலங்கையின் பல பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய வரலாற்றுச் சான்றுகளே காரணமாகும். இச்சான்றுகள் மகாவம்சம் கூறும் விஜயன் குடியேற்றம் பற்றிய கற்பனைக் கதைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே நாகரிகமான இரு மக்கள் கூட்டத்தார் இலங்கையில் வாழ்ந்ததை உறுதிப்படுத்துவதாகும். இப்புதிய கண்டுபிடிப்பில் சர்வதேச சமூகமும் பங்குகொண்டிருப்பதால் அரசும் தமது வரலாற்றுப் பாடநூல்களில் சில மாற்றங்களைச் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. இந்த மாற்றத்தை 1993 இன் பின்னர் வெளிவந்த வரலாற்றுப் பாடநூல்களில் மேலோட்டமாகக் காணமுடிகிறது இந்நூல்களில் இலங்கையின் நாகரிக வரலாறு

விஜயன் வருகையோடு ஏற்பட்டதாக மகா வம்சம் கூறுவதை சுட்டிக்காட்டும் அதே வேளை மகாவம்சம் கூறும் காலத்திற்கு முன்னரே நாகரீகமான மக்கள் வாழ்ந்ததை தொல்பொருட் சான்றுகள் கூறுகின்றன எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆனால் அந்த மக்கள் யார் என்பதைக் கற்கும் மாணவரும், கற்பிக்கும் ஆசிரியரும் தெரிந்து கொள்ளாத வகையில் வரலாற்று நூல்களில் மறக்கப்பட்டிருந்த இராமாயணக் கதையை இடம் பெறச் செய்ததன் மூலம் மறைக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த மக்கள் யார்? எந்த நாட்டிலிருந்து புலம் பெயர்ந்தார்கள்? என்ற உண்மையைத் தெரிந்து கொள்வதன் மூலம் இன்றைய தமிழ் சிங்கள மக்களின் பூர்வீகத்தைத் தெரிந்து கொள்ளலாம்.

## தொல்லியற்சான்றுகளும் மனித நாகரிகத்தின் தோற்றமும்

இலங்கையில் இதுவரை அறியப்பட்டுள்ள காலத்தால் முந்திய மக்கள் இடைக்கற்காலப் பண்பாட்டிற்கு உரியவர்களாவர். இம்மக்களுக்கு முற்பட்ட பழங்கற்கால மக்கள் இலங்கையில் வாழ்ந்தார்கள் என்ற கருத்து காலத்திற்கு காலம் தொல்லியலாளரால் எழுப்பப்பட்டு வருகின்றன. ஆயினும் அக்கருத்தை உறுதிப்படுத்தக் கூடிய பூரணமான சான்றுகள் இதுவரை கிடைக்கவில்லை. இடைக்கற்காலப் பண்பாட்டு மக்களைப் பொறுத்தவரை தாழ்நிலம் தொட்டு, மலைநாடு வரை நீர் நிலைகளை அண்டி வாழ்ந்துள்ளார்கள்என்பதை பலாங்கொடை, இரத்தினபுரி, கித்துள்கொட, அநுராதபுரம், முல்லைத்தீவு, மாங்குளம், மாதோட்டம், பூநகரி ஆகிய இடங்களில் கிடைத்த சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. இவற்றுள் பலாங்கொடையிலும், மாதோட்டத்திலும் இப்பண்பாட்டுடன் இணைந்த பல்வேறு சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் இப்பண்பாட்டு மக்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் இதுவரை கிடைக்கவில்லை. இதற்கு இப்பிராந்தியம் சுண்ணாம்புக்கற்பகுதியாக இருப்பதால் இடைக்கால மக்கள் கல்லாயுதங்கள் செய்யப் பயன்படுத்திய குவாட்ஸ் கல்வகை இல்லாதது ஒரு காரணமாக கூறப்படுகிறது. ஆனால் காரைநகரில் சந்திராந்தை என்ற இடத்தில் இக்கல்வகை கண்டுபிடிக்கப்பட்டிருப்பதால் இப்பிராந்தியத்திலும் இடைக்கற்கால மக்கள் வாழ்ந்திருக்கலாம் என ஊகிக்க இடமளிக்கிறது.

மானிடவியலாளர் இப்பண்பாட்டு மக்கள் ஆதி ஒஸ்ரலோயிட் இனவர்க்கத்தைச் சார்ந்தவர்கள் எனவும், மொழியியலாளர் இவர்கள் பேசிய மொழி ஆதி ஒஸ்ரலோயிட் எனவும் கூறுகின்றனர். தமிழ்நாட்டில் இப்பண்பாட்டு மக்கள் பயன்படுத்திய கல்லாயுதங்களின் தொடக்க காலம் கி.மு. 32,000 ஆண்டுகள் எனவும் இலங்கையில் கி. மு. 28,000 ஆண்டுகள் எனவும் கணிப்பிடப்பட்டுள்ளது. மானிடவியல், மொழியியல் என்பவற்றில் இலங்கையில் நிலவிய இடைக்கற்காலப் பண்பாட்டிற்கும், தமிழ்நாடு திருநெல்வேலி 'தேரி' கலாசாரத்திற்கும் இடையே நெருங்கிய ஒற்றுமை இருப்பதாகத் தொல்லியலாளர் பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர். அல்ஜின் என்ற தொல்லிய

*கதை கேட்பவரின் பொறுமையின் எல்லையைப் பொறுத்து, கதையும் இறுக்கமாகிச் சிறுகதையாகிறது. சுருக்கமும் செறிவும் சிறுகதையின் முக்கிய பண்புகள்.*

— ஜேம்ஸ் கூப்பர் லோறன்ஸ் —

லாளர் தமிழ்நாடு இடைக்கற்காலப் பண்பாட்டு மக்கள் பயன்படுத்திய இருபக்க அலகுடைய கல்லாயுதவகை இந்தியாவில் தமிழ்நாட்டைத் தவிர இலங்கையில் மட்டும் பயன்படுத்தியிருப்பதாகக் கூறியுள்ளார். இதனால் இலங்கையில் அறியப்பட்டுள்ள முதற்பண்பாடும், அதற்குரிய மக்களும் தமிழ் நாட்டில் இருந்து வந்ததாகக் கூறப்படுகிறது. இதில் தமிழ்நாட்டிற்கு நேரெதிரே அமைந்த பூநகரியிலும், மாதோட்டத்திலும் இப்பண்பாட்டிற்குரிய தடயங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதால் தமிழ்நாட்டிலிருந்து ஏற்பட்ட முதல் பண்பாட்டலை முதலில் இப்பிராந்தியங்களில் ஏற்பட்டு பின்னர் இலங்கையின் ஏனைய பகுதிகளுக்குப் பரவியிருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

□□

முத்தொளி உங்களுக்கு புத்தொளி

மிகமிகப் புதியரக வீடியோ கமராக்களில்

**உங்கள் நினைவில் நின்றகலாதவாறு**

**புதிய பாணியில் மிக்சிங் செய்து கொடுக்கிறோம்.**

கோயில் திருவிழாக்கள்

இல்லத்து விழாக்கள்

கழக விழாக்கள்

**எதுவானாலும் உடன் ஞாபகம் வர வைப்பது...**

**முத்தொளி**

குளப்பிட்டிச் சந்தி,
கொக்குவில்.




(1)

இன்று வாழ்வு இருக்கின்ற நிலை எம்மண்ணின் மீதான பற்றைப் புறந்தள்ளி விடமுடியாது. காலநதி பொங்கிப்பிரவகிக்குந் தோறும் அதன் முன் பின்னான பரிமாணங்கள் பிறழ்ந்து விடுகின்றன.

சதா ஏக்கங்களும் துக்கங்களுமாய்த் துன்பச் சிலுவை சுமக்கும் இன்றைய வாழ்க்கைக்கு முன்னால் நாம் வாழ்ந்த அழகிய வாழ்வு நினைவுகளில் விரிகிறது. கண்களை நனைத்து மனதை ஆட்கொண்டு, இழப் புணர்வை அது தொற்ற வைக்கிறது.

வாழ்க்கை அழகானது; உயிர்ப்பு நிறைந்தது என் பதை எங்கள் முந்தையர் வாழ்வு சொல்லும்.

வாழ்வு தன்னை அடிநகர்த்துவதற்கு அந்த வாழ்வு நடமிடும் மண்ணும், பண்பாட்டுச் சூழலும் அவசியமானவை. எங்கள் வாழ்வின் பின்னால் அழகிய எங்கள் மண்ணிருக்கிறது. போரில் சிதிலமைந்து போயிருப் பினும், இருப்பெனும் ஆடைகலையாது இன்னமும் அழகுப் பதுமையாகவே அது நிற்கிறது. வாடையும் சோழகமும் வீசும் போது மணல் எறிந்து கூத்திடும் எங்கள் மண், எங்கள் இருப்பின் ஆதாரமான பண்பாட்டின் ஊற்றுக்கால். எமக்கெனத் தனியான பண்பாட்டை, கலைகளை, மரபுகளை அது தந்தது.

காலநீட்சிக்குள் அற்றுப் போகாதவாறு எம்மண்ணின் அழகு வாழ்கிறது. நினைத்த மாத்திரத்தே சொல்லக் கூடியதல்லவே!

மனது முடிச்சவிழ்ந்து பிரவாகம் எடுக்கும் போது அழகு துளித்துளியாய்க் கொட்டுப்படுகிறது. முத்துக்களாய் நினைவுகளில் தெறித்து அற்ற வாழ்வை ஆசிக்க வைக்கிறது.

எங்கள் மண்ணுக்கும், அந்தக் காலத்துக்கும் உயிர் துடிக்குமாறு நித்திய ஜீவனுண்டு.
அந்த அழகில் முக்குளித்து புனலாடுவோமா?

**சு. சங்கிலிகுமாரன்**

ஐப்பசி மாதத்தில் பூமி செழித்து விடும். புற்காம்புகள் புதிய கம்பீரம் எடுத்து ஆடி, பனித்துளிகளைப் பூந்தேன்களாக்கி நிற்கும். பள்ள ஒழுங்கைகள் வழியே நுரைசிந்த வெள்ள நீர் ஓடிச் செல்லும்.

ஐப்பசியில் பெருமழை தொடங்கினால் மார்கழியில்தான் ஓயும். மாதம் மும்மாரி என்றார்களே, அது இதுதான்! மும்மாத மாரி. இந்த மூன்று மாதமும் மழை பெய்யாத நாளில்லை. வானம் கிழிந்து, சோனாவாரியாக நீரிறங்கும். வெள்ளம் தொடர்ந்து பாயும். இந்தக் காலப் பகுதி தான் பெருமாரி.

கோப்பாய்ச் சிறுகடல் கோடையில் 'எப்பன்' நீருடன் நிற்கும். ஐப்பசியில் அதன் வயிறு பெருக்கும்.

ஐப்பசிக் கடைசியிலே அது பத்துமாதக் கர்ப்பிணி போலாகிவிடும். எல்லை இல்லாமல் பெருமளவு பிரதேசத்தைக் கையகப்படுத்தி விடும். நீரின் அளவு கூடிவிட்டால் அதற்குப் 'பேறுகாலம்' வந்து விட்டது எனலாம். மெல்ல மெல்ல அது உரும்பிராய், சுன்னாகம் எல்லாம் கடந்து கந்தரோடைக்குப்போகும். அதன் 'பெறு வழி' கோடையில் வண்டில் பாதையாகவோ, நடைபாதையாகவோ தான் இருக்கும். 'கிறவல் கல்லுகள்' போட்ட பாதை. அல்லாவிடில் மண்பாதை.

மழை வெள்ளம் கோப்பாயில் நிறமற்று வந்து, கந்தரோடையில் 'செம்புலப்பெயல் நீர்' ஆக வழுக்கியாற்றுடன் இணையும். வழுக்கியாறு வெறும் வெள்ள வாய்க்கால்தான். சற்றுப் பெரிதாக இருந்தது. அதனால் அது ஆறாக ஆயிற்று. அளவெட்டிப் பினாக்கைக் குளத்தில் இருந்து அராலி வரை நீண்டு, மேலதிக நீரைக் கடலுக்கனுப்பும் புண்ணிய கைங்கரியம் அதன் பணியாயிற்று.

மாரியில் வெள்ளம் நிற்காத இடமில்லை. அங்கிக்கெனாதபடி நிலமெங்கும் நீக்கமற நிற்கும். பொக்கணை வெளியில் நின்று பார்த்தால் கோப்பாய், நாவற்குழி வரைக்கும் நீலமாய் வெள்ளக் காடுதான்.

பொக்கணை வெளியில் தோட்டங்கள் குறைவு. முட்புல்லாந்திப் பற்றைகள் தான் அதிகம். நடுவில் பொக்கணைக் கிணறு. அக்கம் பக்கம் கேணி போல இருந்தது. அதற்குள் ஒரு சின்னக் குண்டு. குண்டுக்குள் தண்ணீர் நிற்கும். எவ்வளவு இறைத்தாலும் வற்றாது.

வள்ளிப்பிள்ளை ஆச்சி நெடுகலும் சொல்லுவா:

''உதடா மோனை! லங்கைக்கு ராமர் வரேக்கை குரங்குப் பட்டாளத்துக்கு தண்ணி விடாச்சிட்டுது. நாண்டு கொண்டு நிண்டுதுகள். அவர்வில்லை ஊண்டினார். நிலாவரை வந்தது. உப்பிடி அவர் ஊண்டின ஒண்டுதான் பொக்கணை''

பொக்கணையில்தேசிக்காய் போட்டால் கீரிமலையில் மிதக்கும் என்றும் அவர் நம்பிக்கொண்டிருந்தார். வள்ளிப்பிள்ளை ஆச்சியின் மகன் சின்னத்தம்பியர் படித்துச் 'சேவையர்' ராய், வந்தார். அவர் தாய்க்கு ''இது பொய்யணை'' என்றார். ஆச்சிக்குக் கோபம் வந்தது.

''கண்டகண்ட துகளைப் படிச்சுப் போட்டுக் கனக்கக் கதையாதை'' என்றா. ''ஆச்சியாணை இது எங்கடை சுண்ணாம்புக் கல்லு புண்டு நிலத்துக்கை போக, அந்த மட்டத்திலை இருந்து தண்ணி நிக்குது'' என்றார் அவர்.

''போடா உன்ரை போக்கறுந்த படிப்பும் நீயும், அப்ப ஏன் எங்கடை கிணறுகள் வத்துது. எல்லாம் அவன்ரை திருவருளடா'' என்றார் ஆச்சி உறுதியாக.

உரும்பிராயில் பொக்கணை. புத்தூரில் நிலாவரை. குரும்பசிட்டியில் பேய்க்கிணறு என்று வற்றாத கிணறுகள்பல உண்டு. வெள்ளக்காடாய் பொக்கணை வெளி இருந்தாலும் அக்கம் பக்கத்து நீர் முழுவதையும் பொக்கணைக் கிணறு தன்னுள் இழுத்து விடும். அகிழான் புற்றுக்குள் நீர் போவதைப் போல பொக்கணைக் கிணற்றுக்குள் வெள்ளம் போவதைப் பார்த்துக் கொண்டிருக்கலாம்.

உரும்பிராய்க் கூடாக வருகிற வெள்ளம் மதவடி வெள்ள வாய்க்கால்வழியே அசைந்து செல்லும்போது, மீன்களும் துள்ளியடித்துப் போகும். நெத்தலி, கருந்திரளி, மணலை என்றெல்லாம் நீரைக் கிழித்தபடி போகும்.

முழங்காலளவு வெள்ளம் பாயும். சிறுவர் பட்

டாளமொன்று வெள்ள வாய்க்காலில் நிற்கும். கைகளில் சிரட்டைகளுடன் நிற்கும் அவர்கள் மீனைக் கண்டதும் மீனோடு சேர்த்துச் சிரட்டையை நிலத்தில் அழுத்துவார்கள். மீன் பிடிபட்டால் சரி!

வேறு சிலர் பூவரசங் கட்டையால் அடிப்பார்கள். நீர் தெறித்துப் பறக்கும். கெக்கலித்துச் சிரிப்பார்கள். சற்றுத் தள்ளி உடலைச் சரித்தபடி மீன் துடிதுடித்து மிதக்கும். எடுத்துச் சேர்ப்பார்கள்.

இப்படித்தான் ஒரு நாள் வெள்ள நீர் இடுப்பளவு ஓடிக்கொண்டிருந்த போது யாரோ ஒருவன் கூக்குரலிட்டான்.

''அந்தா பெரிய மீன் ஓடுது''

அடுத்து, காட்டிய இடத்தில் பூவரசம் கட்டைகள் விழ, நீர் தெறித்தது. பலர் வெள்ள நீருக்குள் விழுந்தனர்' நீருள் புரண்டு செல்லும் 'அதை' ஒருவன் பிடித்து விட்டான். மேலே தூக்கியவன் 'ஐயோ' என்றான். செத்த பாம்பு!

கந்தரோடையில்தான் வெள்ளம் கூட. சில இடங்களில் ஆளை மூடும். தெரியாதவர்கள் யாராவது போனால் குட்டைகளுக்குள் விழுந்து சாகவேண்டியதுதான்.

மழை காலத்தில் தோட்ட வேலைகள் இருக்காது. ஆடு, மாடுகளுக்குத் தீவனம் தேடுவதுதான் பெரும்பாடு. இதற்கென்று குடில் கட்டி, வைக்கோல் சேமித்து வைத்திருப்பார்கள். அதற்குப் புறம்பாக இருக்கிறது பனையோலை. எங்கே பார்த்தாலும் யாழ்ப்பாணத்தில் பனையைக் காணமல் இருக்க முடியாது. மனிதர்களின் 'முழுவியளம்' பனைகளில் தான். பெரும் பெரும் பனைகளும், ''இந்தா உன்னை முந்துறன்'' என வளரும் 'வடலிகளுமாய் 'பனங்கூடல்' நிறைந்திருக்கும். பின்னால் யாழ்ப்பாணத்தான் என்றால் பனங்கொட்டைத் தமிழன்' என்று கூறப்பட்டது இதற்காகவா?

பனையோலைகளை வெட்டி வந்து கீறிப் போடுவார்கள். மாரி முடிய மாட்டுக் குடில் பக்கமாக நூற்றுக்கணக்கில் மூரிகளைக் காணலாம். மாடுகளுக்குப் பனையோலை பிரியமானது. தலையை ஆட்டி, அரைத்து அரைத்து அதனைத் தின்னும் அழகோ அழகு!

மழை காலத்தில் தோட்ட வேலைகள் இல்லாததால் பொழுது போக்கிற்குச் சில விளையாட்டுக்கள் உள்ளன. தாயம் போடல், இலுப்பங் கொட்டை சிந்தல், கெந்திப் பிடித்தல், வாரோட்டம், கொக்கான் வெட்டல் என்று விளையாடுவார்கள். வாரோட்டம் என்றால் எதிர்க் கன்னைக் காரனொருவன் வந்து தொட்டு விட்டு ஓடுவான். அவனை, அவன் தனது இடத்தை அடையுமுன்னர் கலைத்து அடிக்க வேண்டும். அடித்தால் ஒரு பழம்! கெந்திப் பிடிப்பது ஒன்று. நாலு பெட்டிக் கெந்தல், எட்டுப் பெட்டிக் கெந்தல் என்பன வேறொரு வகையானவை.

சிறிய சல்லிக் கற்களில் கொக்கான் வெட்டுவது அழகானது. பங்கயமக்கா கற்களை மேலே எறிந்து, கையை நிலத்தில் அறைந்து பின் ஏதோ அபிநயம் காட்டி, மயிரிழையில் அக் கற்களை ஏந்துவது ஆச்சரியத்தை அளிக்கும். எங்கள் தெருவில் இரண்டு பங்கயங்கள் இருந்தனர். ஒருவர் உயரமானவர். நன்றாகக் கொக்கான் வெட்டுவார். மற்றவர் கட்டையானவர். பல் மிதப்பாக இருக்கும்.

இரண்டு பேரும் வேறு சிலரும் கலந்து கொண்ட ''தாயம் போடலில்'' சரசக்கா' அழாப்பி' விட்டார். உடனே' கதை வழிப்பட்டு

சண்டை வந்து விட்டது. மோதியவர்கள் இருவரும் பங்கயங்கள். 'பங்கயம்—2ன் ஊரைப் பிடித் தலை மயிர் பங்கயம் — 1' இடம். 'பங்கயம் — 2' திரும்பி தனது கூரிய பற்களால் ஒரே கடி. ''ஆ ...'' என்றபடி 'பங்கயம் — 1' தலைமயிர் கையை எடுத்தார். பிறகு மற்றவர்கள் இருவரையும் விலக்கி விட்டனர். அதிலிருந்து 'பங்கயம் 1' 'கொக்கான்' பங்கயமானது. 'பங்கயம் 2' 'பிக்கான்' பங்கயமானது. பெரிய பெண்கள் பெரும்பாலும் இவற்றில் பங்கெடுப்பதில்லை. ஆச்சியோடு சேர்ந்து சமைப்பார்கள். சமைத்து முடிய ஆச்சிகள் அணியொன்று புளியடியில் கூடிக்கதைக்கும். பெரிய பிள்ளைகள் புளியடிக்குச் சற்றுத் தள்ளி இருக்கும் இலுப்படியில் அமர்வார்கள்.

வீட்டில் சின்னப் பிள்ளைகள் கெந்திப் பிடிக்கும் போது அருகில் நின்றாலே ஆச்சி ஏசுவார்.

''இஞ்சாலை வாடி குமரி! எக்கணம் கொப்பு வந்தா வேண்டிக் கட்டப் போறாய்.........''

இலுப்படியில் 'குமருகள்' கூட்டம் முக்கியமாக பன்ன வேலையில் ஈடுபடும் பெட்டி, குட்டான், பாய், தடுக்கு என்று ஒவ்வொருவர் கையிலும் ஒவ்வொன்று உருவாகும். கொட்டப் பெட்டி இழைப்பதில் பூமணியக்கா கெட்டிக்காரி. அவவுக்கு பன்னாலையில் ஒரு வாத்தியாரைத் திருமணம் பேசினார்கள். வாத்தியாரின் 'அப்புவும் ஆச்சியும்' பெண்ணைப் பார்க்க வந்தனர்.

பூமணியக்கா அப்போதும் கொட்டப்பெட்டி இழைத்துக் கொண்டிருந்தார். வாத்தியாரின் தாயார் பெண்ணைப் பார்த்தார் பூமணி கறுப்பி. வாத்தியாரோ சிவலை. தாய்க்கு அவ்வளவு பிடிக்கவில்லை.

பெண்ணைப் பார்த்துவிட்டு, ''என்ன கொட்டப் பெட்டியோ?'' என்றார். ''ஓம் ..'' என்று சொல்லி, தான் இழைத்த கொட்டப் பெட்டி ஒன்றை அவரிடம் கொடுத்தார் பூமணியக்கா.

அவர்கள் வீட்டுக்குப் போய் விட்டனர்.

''பொம்பிளை கறுப்பியடா...... உனக்குச் சரி வராது போலை'' என்றார் வாத்தியாரின் ஆச்சி. வாத்தியார் ஆச்சியின் கையிலிருந்த கொட்டப் பெட்டியை வாங்கினார். வாங்கி அதன் அழகைப் பார்த்தார்.

''ஏனணை...... என்ன விலை குடுத்து உதை வாங்கினீங்கள்'' என்றார்.

''நான் வாங்கேல்லையடா...... அவள் பெட்டை தான் இழைச்சவள்'' வாத்தியாருக்கு பிடித்துவிட்டது.

''கறுப்பியெண்டாலும் பரவாயில்லை......... போய்ச் சரியெண்டு சொல்லணை'' பிறகென்ன .... பூமணியக்கா வாத்தியார் பெஞ்சாதி ஆனார்.

பெரிய இளைஞர்கள் கிட்டி அடிப்பார்கள். கிளித்தட்டு மறிப்பார்கள். கிளித்தட்டில் கிளியாய் நிற்பது முக்கியமானது. வேலுப்பிள்ளை அம்மான் கிளியாய் நின்றால் உச்சுவது கடினம். அவர் பொறுத்த இடத்தில் பூட்டுப் போட்டு விடுவார். அவரை ''நெடுங்காலர்'' என்றுதான் சொல்லுவார்கள். ''யாடு'' என்று சொல்லி, நடுக் கோட்டால் ஓடி; கரைக்கோட்டுக்குத் தாவிப் பாய்ந்தாரானால் யாராவது 'அடி' வாங்கியே தீருவார்கள்.

மழைகாலத்தில் இளைஞர்களுக்கு வேறொரு பொழுது போக்கும் உண்டு. அது.........

(வரும்)

# உடையாத விலங்குகள்

அடேல் ஆன்

*'உடையாத விலங்குகள்' (UNBROKEN CHAINS) என்ற தலைப்பில், யாழ்ப்பாணத்தில் நிலவும் சீதன முறைமை பற்றி, அடேல் ஆன் ஆங்கிலத்தில் எழுதிய நூல் தமிழாக்கம் செய்யப்பட்டு தொடர் கட்டுரைகளாக வெளிச்சத்தில் பிரசுரமாகி வருகிறது. இந்த நூலின் இரண்டாம் பாகத்தின் முதல் பகுதியை இங்கு தருகிறோம்.*

5

சீதனமானது, தேசவழமைச் சட்டத்தில் ஒரு சொத்துடமைக் கோட்பாடாக அமையப்பெற்றுள்ளது என்பதை முதலாவது அத்தியாயத்தில் ஆராய்ந்தோம். அத்துடன் தாய்வழிச் சொத்துக்களை பராதீனப்படுத்தும் முறைமை சீதன வழக்கிற்கு மையமாக விளங்குகிறது என்பதையும் எடுத்துவிளக்கினோம். இந்த சமூக வழக்கும், அதன் தனித்துவமான சொத்துக் கையளிப்பு முறையும். யாழ்ப்பாண தமிழ் சமூகத்தில், சொத்துடையோர் மத்தியில், வர்க்க—சாதிய நலன்களைப் பேணுவதிலும் சொத்துடமை உறவுகளை ஒழுங்கமைப்பதிலும் முக்கிய பங்கு வகித்துவருகிறது என்பதைச் சுட்டிக்காட்டினோம். தேசவழமைச் சட்டமானது தாய்வழி வாயிலாக பெண்களுக்கு சொத்துரிமையை வழங்கிய போதும் அதில் பாரதூரமான குறைபாடுகளும் இருக்கவே செய்கிறது. இதன் அடிப்படையில் நோக்குமிடத்து, பெண்களை ஒடுக்கும் ஆணாதிக்க கருத்தியல் அம்சங்கள் தேசவழமையில் பொதிந்துகிடக்கிறது என்பதையும் விமர்சித்தோம். காலனித்துவ யுகத்திலிருந்து நீண்ட காலமாகவே தேசவழமைச் சட்டத்தில் பல்வேறு மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. (1) எனினும் சொத்துடமைப்பாட்டின் அடிப்படை நியமங்களில் மாற்றங்கள் நிகழவில்லை. அதே வேளை யாழ்ப்பாண சமூகவாழ்வில் மாற்றங்கள் நிகழ்ந்திருக்கிறது. அடிமைமுறை ஒழிக்கப்பட்டது. மிகவும் இறுக்கமான சாதிய முறைமையில் சிறிய அளவிலான தளர்வுகள் ஏற்பட்டுள்ளன. ஆயினும் அதன் அடிப்படை அமைப்பு, குறிப்பாக கிராமிய சமூக வாழ்வில், மாற்றமின்றித் தொடர்கிறது. சீதன முறைமையைப் பொறுத்தவரை, அதன் செயற்பாட்டு வழமை மாறவில்லை. ஆயினும் அதன் வடிவத்திலும், நடைமுறைக் குறிக்கோள்களிலும் மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. அன்று சொத்துடமை வர்க்கத்தில் நிலவிய இந்த சமூக வழக்கம் இன்று சமூகத்தின் சகல பிரிவினர் மத்தியிலும் பரவியுள்ளது.

## சீதனம் ஒரு சமூகப்பிரச்னை

பெண்களுக்கு சீதனம் வழங்கும் வழக்கமானது, வரலாற்று ரீதியாக, குடும்பங்கள் மத்தியில் ஒரு முக்கிய சமூகப் பிரச்னையாக இருந்துவந்திருக்கிறது. 17ம் நூற்றாண்டில், கிட்டத்தட்ட முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னரே, யாழ்ப்பாணத்தில் பணிபுரிந்த ஒல்லாந்துப் பாதிரியான போல் டேயஸ் இந்தச் சமூகப் பிரச்னைபற்றி தனது வரலாற்றுக் குறிப்பேட்டில் எழுதியிருக்கிறார். பெண்பிள்ளைகளுக்கு சீதனம் கொடுப்பதற்காக கஷ்டப்பட்ட குடும்பங்கள் தமக்குள் நிதிசேர்த்த சோக சம்பவங்களை தாம் நேரில் கண்டதாக அவர் எழுதியிருக்கிறார். ''இந்தத் தேசத்தில், ஏழைப் பெண் ஒருத்தி கணவனைப் பெற்றுக் கொள்வது இலகுவான காரியமல்ல. இப்படியான கஷ்டமான சூழலில் திருமணப் பெண்ணுக்கு பலர்சேர்ந்து நிதிதிரட்டி சீதனம் வழங்குவதை நான் நேரில் கண்டிருக்கிறேன்'' என்று போல்டேயஸ் குறிப்பிடுகிறார். (2)

சீதன நடைமுறையை, காலம் இன்னும் தளர்த்திவிடவில்லை. இந்தப் பிரச்னைக்கு இன்னும் தீர்வும் காணப்படவில்லை. மாறாக, பல நூற்றாண்டு கால வரலாற்று ஓட்டத்தில் இந்த வழக்கமானது சமுதாயத்தில் வேர்விட்டு வளர்ந்து, இன்று ஒரு பாரிய சமூகப் பிரச்னையாக உருவகம் பெற்றிருக்கிறது. அண்மைக் காலமான ஐம்பதுகளில் கூட திரு. எச். டபிள்யூ. தம்பையா போன்ற அறிஞர்கள் சமூகத்திலிருந்து சீதனக் கொடுமை ஒழிக்கப்படுவது அவசியமென குரல்கொடுத்தனர் மக்களின் மனஅமைதிக்கும் சமூக வளர்ச்சிக்கும் இது அத்தியாவசியமெனச் சொன்னார்கள். ''சீதனம் வழங்கும் இந்த கேடுகெட்ட வழக்கம் படிப்படியாகச் செத்துவருகிறது. எமது இனம் சீரும் சிறப்புடனும் வாழவேண்டுமானால் இந்தச் சாபக்கேடு என்றோ ஒரு நாள் முற்றாக அழிக்கப்பட வேண்டும்.'' என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். (3)

சீதனக்கொடுமை படிப்படியாக செத்து வருகிறது என அவர் எண்ணியது வெறும் கற்பனாவாதம். அன்றைய சூழ்நிலையில் அவருக்கு அப்படித் தோன்றியிருக்கலாம். ஆனால் அடுத்த நான்கு தசாப்தங்களில் சீதனப் பிரச்னை எந்தத் திசையில் செல்லும் என்பதையோ, தனது மக்கள் எத்தகைய மோசமான ஒரு எதிர்காலத்தை சந்தித்து நிற்பார்கள் என்பதையோ அவர் கற்பனை பண்ணியிருக்க முடியாது. கடந்த இரண்டு தசாப்தங்களாக சீதனப் பிரச்னையானது மிகவும் சிக்கலான ஒரு சமூகப் பிரச்னையாக உருவெடுத்திருக்கிறது. பொருளிய எதார்த்த நிலைக்கும், சமூக எதிர்பார்ப்புகளுக்கும் மத்தியில் அது ஒரு தீராத முரண்பாட்டை ஏற்படுத்தியிருக்கிறது. தாம்பத்திய உறவின் புனிதத்தை மாசுபடுத்தியிருக்கிறது. ஆணுக்கும் பெண்ணுக்கும் மத்தியிலான மனித உறவை, பணஉறவாக, திட்டமிடப்பட்ட நிதியொப்பந்த உறவாக மாற்றியிருக்கிறது. சீதன வழக்கமானது எத்தனையோ குடும்பங்



களை விரக்திக்கும் வறுமையின் விளிம்பிற்கும் தள்ளிவிட்டிருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, எண்ணிலடங்காத எத்தனையோ பெண்களது தாம்பத்திய வாழ்வுரிமையை மறுதலித்திருக்கிறது.

அந்தக் காலத்தில் சீதனம் கொடுக்கும் வழமையில் தீமையான அம்சங்கள் இருக்கத்தான் செய்தது. ஆனால் இன்றைய காலத்தில், இந்த வழக்கம், மிகவும் கொடுமையான ஒடுக்குமுறை அம்சங்களைக் கொண்டதாக வளர்ச்சி கண்டுள்ளது. இதனால் சமூகத்தில் பெண்களின் வாழ்நிலை மேலும் மோசமான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறது. சீதனமானது ஆண்களின் மேலாதிக்க அதிகாரத்தை மேலும் வலுப்படுத்தியுள்ளதுடன் பெண்களின் சொத்துரிமையையும் வெகுவாகப் பாதித்துள்ளது.

## அரச ஒடுக்குமுறையும் சீதனத்தில் அது விளைவித்த தாக்கங்களும்

தமிழ் மக்கள் மீதாக கட்டவிழ்த்து விடப்பட்ட அரச ஒடுக்குமுறையானது, சீதனப் பிரச்னையை மேலும் சிக்கலாக்கி தீவிரப்படுத்திய புறநிலைக் காரணிகளில் முக்கியமானது என்பதில் சந்தேகமில்லை. கடந்த நான்கு தசாப்தங்களாக தமிழ்சமூகம் மீது படிப்படியாக ஏவிவிடப்பட்ட அரச ஒடுக்குமுறையானது சமூகக் கட்டமைப்பில் பாரிய சீரழிவை ஏற்படுத்தியது. இந்த சமூகச் சீரழிவின் விளைவாக பெரும் தொகையான இளைஞர்கள் வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்தனர்.

கல்வியில், தொழில் வாய்ப்பில், பதவியுயர்வில், சிங்கள அரசு கடைப்பிடித்த பாரபட்சமான கொள்கை, பொருளாதார அபிவிருத்தி திட்டங்களிலிருந்து தமிழர் மானிலம் திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டமை, சிங்களக்குடியேற்றங்களால் பாரம்பரிய பிரதேசங்களிலிருந்து தமிழர் பலவந்தமாக வெளியேற்றப்பட்டமை, இவற்றுடன் சேர்ந்தாற்போல, தமிழருக்கு எதிராக ஏவிவிடப்பட்ட இராணுவ வன்முறை, அரசியல் அடக்குமுறை — இவை காரணமாக தமிழ் இளைஞர்கள் பெருந்தொகையில் வெளிநாடுகளுக்குப் படையெடுத்தனர். 1983ல் நிகழ்ந்த இன வன்முறைப் பூகம்பம் நிலைமையை மேலும் மோசமாக்கியது. சீரழிந்து சென்ற பொருளாதார நிலைமையும், தீவிரப்படுத்தப்பட்ட இராணுவ படையெடுப்புகளும், நிலைகுலைந்துபோன அரசியல் நிலைமையும் தமிழ் இளம் சமூகத்தினரை பொருளாதார, அரசியல் அகதிகளாக இடம்பெயரத் தூண்டியது. இந்த இளைஞர்களின் இடம்பெயர்வு சீதன முறைமையில் பெரும் தாக்கத்தை விளைவித்தது.

தமிழ் இளைஞர்களுக்கு வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புகள் கிட்டியதால் யாழ்ப்பாண சமூக வாழ்விலும் பரந்த அளவிலான மாறுதல்கள் நிகழ்ந்தன. அந்நிய செலாவணியுடன் கூடிய பெருந்தொகைப் பணம் கிரமமாக வரத்தொடங்கியதால் பல குடும்பங்களுக்கு நிலையான வருமானம் கிட்டியது. இதனால் வெளிநாட்டு 'காசுக் கட்டளைப் பொருளாதாரம்' உருவாக்கம் பெற்றது. வெளிநாட்டுப் பணம் வந்துகுவிய சமூக அபிலாசைகளும் எதிர்பார்ப்புகளும் அதிகரிக்கத் தொடங்கியது.

தமிழ் இளைஞர்களின் வெளிநாட்டுப் பயணம், ஒரு குறிப்பிட்ட சமூகப் பிரிவினர் மத்தியில் இடம்பெறவில்லை. சமூகத்தின் சகல பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் அந்நிய நாடுகளுக்கு இடம்பெயர்ந்து சென்றனர். இதனால் சமூக எதிர்பார்ப்புகள் பரந்துபட்டதாக வளர்ந்தது. சீதன நடைமுறையில் இதன் தாக்கம் பெரிதாக விழுந்தது. வெளிநாட்டுப் பணத்தால் மூலதனமும் வாழ்க்கை வசதிகளும் அதிகரித்ததால் சீதன நடைமுறைக்கு அது மேலும் பலம்சேர்த்தது. சொத்துடைமையற்ற சமூகப் பிரிவினருக்கும்

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் இலவச நூலகம்.

வெளிநாட்டுப் பணம் வந்துசேர்ந்ததால், அவர்களும் பணம்படைத்த வர்க்கத்தினரின் பழக்கத்தைப் பின்பற்றி சீதனச் சகதிக்குள் சிக்குப்பட்டனர்.

ஒட்டுமொத்தமாக இந்த சமூகப்பொருளாதார மாற்றங்கள், சீதன வழக்கத்தில் விழுத்திய தாக்கங்கள் யாவை? இவை பெண்களின் வாழ்நிலையை எவ்வாறு பாதித்துள்ளன?

முதலாவதாக ஒரு விடயத்தை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். அதாவது, யாழ்ப்பாண சமூக சூழலில் பொருளாதார முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளும் வசதிகளும் மிகக்குறைவு. அத்துடன் பரந்த அளவில் வேலைவாய்ப்பின்மையும் நிலவுகிறது. இந்த நெருக்கடியான சமூக சூழலில் திருமண வாழ்வின் பொருளாதார பலத்தைக் கட்டியெழுப்பும் பெரும்பளு பெண்கள்மீதும் அவர்களது குடும்பம்மீதும் சுமத்தப்படுகிறது. குறைந்த சம்பளம்பெறும் ஆண்களும் வேலையற்றோரும்கூட பெரும் தொகையில் சீதனம் கோருகிறார்கள். தமது சொந்த பொருளாதார இயலாமையை ஈடுசெய்யவும், தமது திருமண வாழ்வுக்கு மூலதனத்தைத் தேடிக்கொள்ளவும், தமது சமூக அபிலாசைகளை பூர்த்திசெய்துகொள்ளவும் சீதனத்தை அவர்கள் நாடுகின்றனர். சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் ஆற்றலிழந்து நிற்கும் ஆண்கள் இலகுவான வழியில் தம்மை வளம்படுத்திக்கொள்ள சீதனத்தை தேடுகிறார்கள்.

இரண்டாவதாக, சீதனச் சந்தையில் எழுந்துள்ள மிகவும் தீவிரமான போட்டி சீதன நடைமுறையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. கணவன்மாரைத் தேர்ந்துகொள்வதில் எழுந்துள்ள இந்த விபரீதமான போட்டிக்கு பல காரணங்கள் உள்ளன. அரச அடக்குமுறையாலும். போரினாலும் பெருந்தொகையில் ஆண்கள் மரணிக்க நேர்ந்தமையும், வெளிநாடுகளுக்கு பெருந்தொகையான ஆண்கள் இடம்பெயர்ந்தமையும் ஆண்-பெண் விகிதாச்சாரத்தில் ஒரு சமமற்ற சரிவுநிலையை ஏற்படுத்தியது. திருமண வயதையெட்டிய பெண்களின் தொகை ஆண்களைவிட பெருமளவு கூடுதலாக உள்ளது. ஆண்-பெண் விகிதாச்சார சமநிலையில் ஏற்பட்ட சரிவுக்கு மேலாக பொருளாதார நெருக்கடி தலைதூக்கி நிற்கிறது. இந்தச் சமூகப் பொருளாதார சிக்கல்களால் எழுந்துள்ள அவலநிலை காரணமாக, திருமணச் சந்தையில், பேராசை பிடித்த ஆண்களின் தீராத சுரண்டல் பசிக்கு பெண்களே பலியாக நேர்ந்துவிடுகிறது. இந்த இக்கட்டான சமூக சூழ்நிலையை தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி பெண்களின் சீதனத்திலிருந்து பெருமளவு இலாபத்தைப் பிடுங்கிவிட ஆண்கள் முனைகிறார்கள். இதன் விளைவாக, சீதனத்தின் பெறுமானம் வானத்தைத் தொடுமளவிற்கு உயர்ந்துள்ளது. சீதனப்பெறுமாணத்தின் உயர்ச்சி ஒருபுறமிருக்க, தற்கால சமூகப் புறநிலையின் காரணமாக சீதனத்தின் உள்ளடக்கத்திலும் ஒரு புதிய பரிமாணம் தோன்றியிருக்கிறது.

பாரம்பரிய சொத்துடமையான காணி நிலம், வீடு, நகைகள் போன்றன தொடர்ந்தும் பெண்களின் சீதனத்திற்கு அடிப்படையாக இருந்துவருகிறது. ஆயினும் கடந்த இரு தசாப்தங்களாக சீதனத்தில் புதியதொரு அம்சம் முதன்மைபெற்றுள்ளது. கணவனைத் தெரிவுசெய்வதிலும், திருமண உடன்பாட்டை பூர்த்திசெய்வதிலும் முக்கிய நிர்ணய சக்தியாக இந்தப் புதிய அம்சம் உருவெடுத்திருக்கிறது. அதுதான் சீதன ரொக்கப்பணம். இந்த சீதன ரொக்கப் பணம் வழங்குவதில் இரு வழிமுறைகள் கையாளப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் மரபுமுறையான சீதனச் சொத்துக்குப் பதிலாக சீதன ரொக்கப்பணம் கொடுக்கப்படுகிறது. அசையாச் சொத்திற்குப் பதிலாக ரொக்கப்பணம் கொடுக்கப்படும் இந்த வழமையானது ஒரு விடயத்தைப் புலப்படுத்துகிறது. காணி நிலத்தினதும், வீட்டினதும் பெறுமதி சரிந்துவருவதை இது சுட்டிக்காட்

டுகிறது. போர்ச்சூழலும் இதற்கு முக்கிய காரணம். உதாரணமாக, தமிழர் நிலத்தை இராணுவம் ஆக்கிரமித்து வருவது குடியிருப்புகள்மீது விமானக்குண்டுவீச்சு, பீரங்கித்தாக்குதல்கள் நிகழ்வது, அத்தோடு கட்டிட சாதனங்கள்மீது தடைவிதிக்கப்பட்டிருப்பது போன்றன சொத்துடமையின் மதிப்பைக் குறைத்திருக்கலாம். இதன் காரணமாக ரொக்கப்பணத்தை வங்கிகளில் சேமிப்பாக வைத்திருப்பதையும் யாழ்ப்பாணத்திற்கு வெளியாக வீடுகளை வாங்குவதிலும் சிலர் ஆர்வம் காட்டுகின்றனர். இப்படியான நோக்குள்ளவர்களின் எண்ணிக்கை மிகக்குறைவு இவர்கள் வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்து செல்வதையே விரும்புகிறார்கள். ஆனால் பெரும்பான்மையான சந்தர்ப்பங்களில் 'நன்கொடை'(DONATION) என்ற பெயரில் ரொக்கப்பணம் வழங்கப்படுகிறது. இந்த நடைமுறையில் அசையாச் சொத்தும், நகைகளுடனும் ரொக்கப்பணமும் நன்கொடையாகக் கொடுக்கப்படுகிறது சீதனஉடைமையுடன் முற்றிலும் தொடர்பற்றதாக இந்த ரொக்கப்பணம் அமைந்துவிடுகிறது. இந்த ரொக்கப்பணம் திருமணஒப்பந்தத்துடன் தொடர்புடையதாக இருக்குமானால் அது பெண்ணுடைய சீதனமாக, அவளது தனிப்பட்ட சொத்துடமையாகக் கொள்ளப்படும். (4) இங்கு நிலைமை அப்படியல்ல. நன்கொடையாக கொடுக்கப்படும் ரொக்கப் பணம் மணமகளின் உடைமையாக அல்லாது அது மணமகனுக்கும் அவனது குடும்பத்திற்கும் சென்றடைகிறது. திருமண உடன்பாட்டின் நிர்ப்பந்தமாக இது இடம்பெறுகிறது. இவ்விதம் மணமகனுக்கு பணமாக நன்கொடைகொடுக்கும்இந்தப்புதிய வழக்கு மணமகளுக்கு சீதனம்கொடுக்கும்பண்டைய மரபுமுறைக்கு முற்றிலும் மாறானது, முரணானது. அதுமட்டுமன்றி, மணமகனுக்கு ரொக்கப்பணமாக உடைமையை மாற்றீடு செய்யும் இந்த வழக்கம் பெண்களின் சொத்துரிமைக்கு பெரும் பங்கத்தை விளைவித்துவிடும்.

திருமண உடன்பாட்டில் செய்துகொள்ளப்படும் பண நன்கொடைகளை 'அருபமான சொத்து' என வர்ணிக்கலாம். அசையாப் பொருட்களைப் பொறுத்தவரை அவை சட்டரீதியாக தெளிவான முறையில் சீதன உறுதியில் எழுதப்படுவதுண்டு. ஆனால் பண நன்கொடை இவ்விதம் எழுத்தில் உறுதிப்பாடு செய்யப்படுவதில்லை. அதனை இரகசியமாக வைத்துக்கொள்ளலாம். அல்லது மறுத்தும் விடலாம். எனவே, பண நன்கொடைகள் பெண்களது சீதனச் சொத்தின் பெறுமதியைக் குறைத்துவிடுகிறது. அத்துடன் அசையாச் சொத்துக்களில் அவளுக்குள்ள சட்டரீதியான உரிமைப்பாடு நன்கொடையில் இருக்காது. சட்டரீதியான ஆவணப்படுத்தலுக்கு அப்பால், அதை மீறியதாக பணநன்கொடை வழங்கப்படுகிறது. எனவே, துரித கெதியில் வளர்ந்துவரும் இந்த நன்கொடை வழக்கம் தாய்வழிச் சொத்துடைமையையும் பெண்களின் சொத்துரிமையையும் மேம்பாடுசெய்யப்போவதில்லை. குமாரசுவாமியின் ஆய்வு குறித்துக்காட்டுவதுபோல பண்டைய சீதன வழக்கத்தில் மணமகளுக்கு தனிவீடு அமைத்துக்கொடுப்பது மரபாக இருந்தது. இதில் ஒரு சமூக நடைமுறைப் பயன்பாடு இருந்ததாக அவர் சொல்கிறார். ஆனால், சீதனப் பணமாகவும் நன்கொடையாகவும் கொடுக்கப்படும் இன்றைய வழமை பழைய சமூக நடைமுறையின் அர்த்தத்தையும் குறிக்கோளையும் பெருமளவிற்கு மழுங்கடித்துவிட்டது என்றே சொல்லவேண்டும்.

சீதனப் பிரச்னை ஏன் இவ்விதம் சிக்கலானதாக உருவெடுத்துள்ளது? இந்த சாபக்கேட்டை சமூகத்திலிருந்து ஒழித்துக்கட்ட முடியாதா? இந்த நடைமுறைக்கு மக்களிடமிருந்து ஏன் எதிர்ப்புக் கிளம்பவில்லை? இந்த இழிவான பழக்கத்தில் பங்குகொள்ள மக்கள் ஏன் மறுக்கவில்லை? இவ்விதம் பலர் கேள்விகளை எழுப்பலாம், இந்தக் கேள்விகள் நியாயமானவை. சீதன முறைமை நீடித்து நிலைத்து நிற்பதன் முக்கிய கார

ணிகள் பற்றி நாம் மேற்கொண்டு தரப் போகும் விளக்கங்களிலிருந்து ஒரு உண்மை புலனாகும். அதாவது, சீதன முறைமை யானது தமிழ் சமூகத்தின் நரம்புமையமாக விளங்கும் சமூக பண்பாட்டுப் பிரச்னைக ளுடன் ஆழமாகப் பின்னிப்பிணைந்து கிடக் கிறது என்பதை கண்டுகொள்ளலாம். இது பற்றி இனிப்பார்ப்போம். முதலில், ஒழுங்கு செய்யப்படும் திருமண முறைபற்றி ஆராய் வோம்.

(தொடரும்)

## உசாத்துணை நூல்களும் குறிப்புகளும்


1. *For an exposction on the modificotions to Tesawalami, see, 'THE LAW-OF TESAWALAMAI' H.W. Tambiah, Tamil Culture Vol. VII, No 4 - OCTOBER 1958.*

2. *P. Baldaeus. A TRUE AND EXACT DESCRIPTION OF THE CREAT ISLAND OF CEYLON; Page 366.*

3. *H. W. Tambiah, DOWRY PROPERTY '(CHIDENHAM)' in the LAWS AND CUSTOMS OF THE TAMILS OF JAFFNA, Page 172.*

4. *see the Tesawalamai Ordinance, Para 3 in Tambiah's, LAWS AND CUSTOMS OF THE TAMILS OF JAFFNA, Page 26, and sri Ramanathan's TESAWALAMAI Page 95.*



உங்கள் விருந்துகளுக்கு உயர்ப்புத் தருவது எது?
சுவையும் மணமும் நிறைந்த சாப்பாடு தானே!

**உங்கள் விருந்துகளைச் சிறக்கச் செய்கிறது**

**குமார் அரைக்கும் ஆலை**

- *மிளகாய்*
- *அரிசி*
- *தானிய வகை*

**எவையானாலும் சிறப்பாக அரைத்துத் தருகிறார்கள்.**
**நினைவில் வையுங்கள்!**

**குமார் அரைக்கும் ஆலை**

சித்தங்கேணிச் சந்தி,
சித்தங்கேணி.

சிறுகதை

# வெண்மையின் வருகை

செ. பொ. சிவனேசு

மப்பு, மந்தாரம் சூழ்ந்த நிலை. வீசுகிற மென் காற்றிலே இதமான குளுமை இல்லையே! நடுநிலப் பகுதி தான். ஏனோ, கடலோரத்தை ஒத்த கசகசத்த வெப்பம்! இதற்குள் தெற்கு வானமோ அதித கட்டி இருட்டாய்; கன்னங்கரிய, பூதாகார அண்டாவால் கவிழ்த்து மூடியதாய்.

இருந்து கொண்டிருப்பது படலையடியில். தென் திசையே நேரெதிர்ப் பார்வையில். அங்கிருந்தே தோன்றத் தொடங்கியது — புள்ளியாய்; வெள்ளையாய். என்னதானோ?... புரியவேயில்லை! குழப்பம்! மெல்ல மெல்ல — மிக மிக மெல்ல — இங்கு நோக்கியே வருகிறது.

எட, ஏதோ சிறகு போல தெரியுது! ........ உதிர்ந்திருக்குமோ ........ ஏதாவது பறந்து கொண்டிருந்த வெள்ளைப் பறவையில இருந்து? இதென்ன, இப்ப கொஞ்சம் பெரிசாத் தெரியுது; . .. சிறகடிக்கிற மாதிரியும் இருக்குது! கொக்கோ? ...... கொக்கு ..... கொக்கு மாதிரித் தான்.........

திடீரென்றோ சில குரல்கள். மிக மிக அருகில்; உடலை உரசி நிற்பதாய். அக்கம் பக்கம் பார்த்தால் யாருமே இல்லை. கண்ணெட்டுத் தூரங்களும் துழாவியாயிற்று. ஆள்நடமாட்ட அறிகுறி துளியுமில்லை.

இதென்னடா புதுமையாய் கிடக்கு!

குரல்கள்!... ... குரல்கள் ...... மிக அருகிருந்து பேசுவதாய்க் குரல்கள்!

ஒரு குரல்: ''அந்தா, வெள்ளைப் புறா வருகுது! ... அமைதி! ..... இனிமேல் அமைதி! ..... தீர்வு! ...... இனிமேல் தீர்வு!... .....''

''ஓம் ... ஓம் .. .. வெள்ளைப் புறா தான்! ...... அது வெள்ளைப் புறாவே தான்! இனி அவலங்கள் இல்ல! எங்கட துன்பங்கள் தீரப் போகுது!'' — ஏனையவை.

துள்ளி ஆடுவது போல் தோன்றியது. யாரையுமோ கண்ணாற் புலனுணர இயலவில்லை. குரல்கள் குதூகலமாய் ஆரவாரித்தே இருந்தன. ஒப்பவில்லை. ஒப்புக் கொள்ள உளம் உடன்படவில்லை.

என்ன இதுகள்? விசர்க் கூட்டங்கள்! ஏன் இப்படி அப்பாவியளாய் இருக்குதுகள்?

கத்த வேண்டும் போலிருந்தது. இயலவில்லை — 'இல்ல, நம்பாதேங்கோ! எதுக்கும் கிட்ட வரட்டும்!

அதுக்குப் பிறகுதான் உறுதி!" - எழுந்தால் இயலவில்லை. திக்கு முக்காடி எழுகிற முயற்சி. இரண்டு கைகளும் உயர்ந்தன. குனிந்து குனிந்து நிமிர வேண்டியிருந்தது. 'ஆ ..ஆ' வெனப் பிளந்து மூடியது தான் வாய். வார்த்தைகளோ என்றால் ;வரவேயில்லை. திண்ணமாய்த் தொண்டைக்குட் பஞ்சடைத்தாற் போலிருந்தது. திணறல்! யாரையுமோ கண்ணிற் படவில்லை. கத்துவதில் முயற்சி.

திடீரென்று ஏதோ கனதியாய் விழுந்தது. அருகே—உடலருகே நிலத்தில். 'மளா' ரெனப் பேயொலி வெடித்தது இமைப்புக்குள்.

ஐயோ! .. செத்தன்! செத்துப் போனன்! ... செத்துப்போ.... சாகேல்லையே? .. .. இல்ல . .... சாகேல்ல!.........

கிடந்தது வீழ்ந்து தான். அவ்விதமாய்த் தலை மட்டும் நிமிர்ந்தது. சுற்று முற்றும் பார்க்க அதிர்ச்சி. மனிதர்கள் இல்லை முன் போலவே. குரல்களுமோ எல்லாமாய் அற்றுவிட்டன. ஆனாலோ........

ஐயோ! .. இதென்ன சதை சதையாக் குவியல் .... துண்டு துளா மனிசர்......... எல்லா இடமும்! .......
இஞ்செ... தெருவெல்லாம் ரத்தம்!... பெருமழை விட்ட மாதிரி பெருக்கா ஓடுது!.........

துணுக்குற்றது. சடுதியாய் இமைகள் பிரிந்தன. கரிய துணியாற் கண்களைக் கட்டிவிட்டதென இருட்டு.

ஆ...... நான்....... நான்......... எங்க இருக்கிறன்?.........

தன்னியல்பி ாறிக் கைகள் துழாவின. தலைமாட்டில் ஏதோ தட்டுப்பட்டது. தீப்பெட்டி. தட்டினால .. விளக்குத் தெரிந்தது. கொளுத்தியாயிற்று. தலையின் அழுக்குதலில் இருந்து தலையணை தப்பிக் கிடந்தது.

திகைப்பு சற்று நொடிகளைக் கரைத்தது. ஆசுவாசம். ஏதோ விதம்



மேசைக்குப் பார்வை போனது. நாட்குறிப்புப் புத்தகம் பட்டது.

2

கொடுத்தவன் போராளி நண்பன். "மச்சான், இந்த டயறிய ஒருக்காப் பார். வீரச்சாவடைஞ்ச போராளி ஒருவன்ரை. உனக்கு உதவும். கதை, கவிதை எழுதிறனீ."

ஏற்கெனவே படித்தாயிற்று. மீண்டும் படிக்க விருப்பம் கிளர்ந்தது.

நிதானமாய்ப் பக்கங்கள் புரண்டன.

''எதிரியின் பீரங்கி நிரந்தரமாய்க் குளிர்கிற வரை எங்களது கண்களும் நெஞ்சங்களும் அனலாகவே இருக்கும். எங்கள் துப்பாக்கிகள் போல'' — இவ்வித சிந்தனைகள்.

அதிகம் என்றில்லை அங்கொன்று இங்கொன்று.

ச்சாய்..... கோடி பொன்னும் ஈடில்ல! மணி மணிக் கருத்துகள்!

கவிதைபோல இன்னொன்று:

''ஓயாது ஓர்நாளும் கடலலை
காணாது மீளாது கரை தனை
சாயாது மாயாது போர்ப்படை—புலி
பாயாது மீளாது விடுதலை!''

பெரும்பாலும் நாளாந்தக் கடமைகள் பற்றியவை. எல்லாவற்றுக்கும் மேலே ஒரே வசனம்: 'உயிருடனிருந்தேன்'— ''இன்று காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை உயிருடனிருந்தேன்.'' இதன் கீழேதான் குறிப்பு: ''வடமுனையின் முன்னணிக் காவலரண்கள் ஒன்றில் பணி.''

இதென்ன? இந்த உயிருடனிருத்தலுக்கு என்ன விளக்கம்?......... ஓ...... கடமையில இருக்கிற மனிசன் தான் உயிர் மனிசன்...... மற்றவன் செத்த பிணம்...... அட...... என்ன அருமையான கோட்பாடு!

பக்கங்கள் ஆர்வமாய்ப் புரண்டு போயின. படித்து முடித்ததே தெரியவில்லை. ஆழ்ந்த சிந்தனை. மெல்லக் கண்களைச் சுழற்றியது. தன்வசமின்றி தலை மேசையிற் சாய்ந்தது.

3

வேடுவனே தான். அம்பு, வில்லு, அம்புறாத்தூணி, ஈட்டி; பறட்டைத் தலை; வெற்றுடம்பு. ஆனால் ஒன்று. நீளக் காற்சட்டை போட்டிருந்தான் — இராணுவத்தினரது போல். ஒரே குழப்பம்.

இதென்ன வினோதமா இருக்கு! ஆதிகாலக் காட்டுமிராண்டிதான். ஆனா ... எப்பிடிக் காற்சட்டை போடுவான்? தோலுரியோ, மரவுரியோ எல்லோ கட்டுவான்!....

சிக்கிய வெள்ளைப் புறா மிரள முழித்தது. கையிற் கிடந்து திணறியது. எதிரே ஒரு மனிதன். ''வேண்டாம்! .... விட்டுவிடு!... பாவம்!...''

சிபிப் பேரரசன் போலில்லை. தலையில் முடி இருந்தது தான். தங்கம், வைரம் அல்ல, சாதாரண தலைமுடி. பளபளக்கும் பட்டாடைகள் அல்ல. சராசரிப் பொதுமக்கள் உடை.

''கொல்லாதே!.... விட்டுவிடு! உயிர்வதை பெரும்பழி!.........

வேடுவன் பல்லிளித்தான். காலில் வீழ்ந்தான் மனிதன்!

''சரி, விட்டுவிடுகிறேன். இந்தப் புறாவின் எடைக்கு ஈடாக உன் உடம்பிலிருந்து சதையை வெட்டித் தர வேண்டும்!''

மனிதன் சடுதியாய் எழுந்தான். ''இதோ! உடனேயே!''

''இந்தா கத்தி!''

ஒரு தட்டில் புறா. மனிதனின் சதை மறுதட்டில். தராசோவென்றால் நேர் காட்டுவதாய் இல்லை. மீண்டும் வெட்டினான். மீளவும்!... மீளவும்!! ...... மீளவும்!!!.........— அசையவே இல்லை. ஏறியே விட்டான் முழு மனிதனாக. காட்டியது நேர்.

''என்னை முழுதாகவே எடுத்துக் கொள். வெள்ளைப் புறாவை விட்டுவிடு!''

இனி என்ன? பழையபடி வேடுவன் சிவனாக மாறுவான். மனிசனை வாழ்த்தி அருள்புரிவான். இந்தா மாறப்போறான்... மாறப்போறான் .. இந்தா இந்தா .. இதென்னடா இது, மாறுறானில்ல? ... கதை எல்லோ தலைகீழா மாறுது!

இடம் வலமாய்த் தலையசைத்தான். வேகமாய் அசைத்தான். எக்காளமாய்ச் சிரித்தான். பாரிய பாறை பிளந்ததென வாய். கோரமாய்த் தெரிந்தன பற்கள். வெள்ளைப் புறாவின் கழுத்தைத் திருகினான். வாயருகே கொண்டு போனான். 'லபக்'— விழுங்கியே விட்டான்! கூரிய, நீண்ட வாளைத் தூக்குகிறான்! மனிதனை நோக்கி ஓங்குகிறான்! ...... ஓங்குகிறான்!......... ஓங்குகிறான்! ... .

மளாரென்றது. தரை இடித்த இடம் தலையில் வலித்தது. நாற்காலி சாய்ந்து கிடந்தது. எரிந்து கொண்டிருந்தது இன்னமும் மேசையில் விளக்கு. அணைத்து விட்டுத்தான் படுக்கையிற் சாய்ந்தது.

4

தெருவெங்கும் பரபரப்பு. மகிழ்ச்சி. குதூகலம் பெருக்கெடுக்கிறது. படலைக்கு வந்தால், ஒரே மக்கள் கூட்டம். ஆளையாள் கட்டித் தழுவுகிறார்.

பருத்த தொந்தியுடன் முதியவர் மல்லாடுகிறார். தடித்த உடலம் இயன்ற வேகத்தில் ஓடுகிறது. ''விடுதலை கிடைச்சிட்டுது!...... விடுதலை கிடைச்சிட்டுது!.........''

இளைய பெண்கள், ஆண்கள் மிதிவண்டிகளில் பறக்கிறார். எல்லா வண்டிகள், ஊர்திகளிலும் தேசியக் கொடி. கூச்சலிடுகிறார்; ''தமிழீழத்தை ஐ. நா. சபை ஏற்றுக் கொண்டிட்டுது!''

சிவப்பு, மஞ்சள் உடைகளில் எல்லாக் குழந்தைகளும். மூதாட்டிகளின் கைகளிலெல்லாம் தேசியத் தலைவர்—உயர்த்திப் பிடித்து நிற்கிறார்கள் படங்களை. தாமரைகள் பூத்துக் கிடக்கின்றன — சுருக்கம் விழுந்த பொக்கை வாய்கள். வரிப்புலிச் சீருடை வீரரின் அணிநடை; எந்தந் தெருக்களில் புகுந்தாலும் ஒலிபெருக்கிகள் தாயக எழுச்சிப் பாடல்கள், பந்தல்கள், அலங்கார வளைவுகள், தெருக்களின் இருபுறமும் மக்களின் திரளல்.

யாரோ ஒருவர் திடீரென தெருவின் நடுவே பாய்கிறார். ''என்னப்பா, இன்னுமே வேடிக்கை பார்க்கிறியள்? உந்தக்குணம் ஒரு காலமும் விட்டுப் போகாதே?''

மக்கள் மத்தியில் திடீர் உணர்ச்சி வேகம். சங்கு சேமக்கலம் ஒலிக்கத் தொடங்குகிறது. உயர்ந்து உயர்ந்து ... உயர்ந்து கொண்டே வருகிறது.

கிட்டவே வந்துவிட்டதாய்!......
காதுக்குள்ளேயே ஒலிப்பதாய்!.......

உண்மையிலேயே கேட்கத்தான் கேட்டது. பக்கத்துக் கோவிலில் திருவெம்பாவை வழிபாடு. பாட்டின் இடையிடை சங்கு, சேமக்கலம்.

5

வழிபாடு முடிந்து மணியோசை கேட்டது. தலை வாசலைத் திறக்க குளிர்காற்று வருடியது. அடிவானில் பாரிய செந்தாமரை பூக்கத் தொடங்கி விட்டது. படியிற் குந்தியாயிற்று. பக்கத்து வீட்டில் ஆளாரவாரம். புகையிலைக் கன்றுகளுக்குத் தண்ணீர் வார்க்க ஆயத்தமாகிறார்கள். பேச்சிற் குறுக்கிட எண்ணமில்லை. இங்கிருந்தே கேட்கத் தான் விரும்பியது.

''பிரச்சினை தீருற மாதிரி இல்ல!'' — முதிய குரல்.

''ஒண்டுக்கும் இராணுவம் விடாது! இந்தியாவும் ஏதோ சாட்டுக்கு 'வரவேற்கிறம்' எண்டுது. உள்ளார்ந்தமா விருப்பமில்ல! சிங்கள அரசாங்கம் எல்லாத்துக்கும் நசிஞ்சு போகுது! பிறகு எங்கை தீர்க்கப் போகுது?'' — நடுத்தரம்.

''உடனடிப் பிரச்சினையத் தீர்ப்பம் எண்டினம். இப்ப, அடிப்படைப் பிரச்சினையள முதலில ஆராய்வம் எண்டினம். உடனடிப் பிரச்சினையத் தீர்க்கப் பின்னடிக்கிறவையே அடிப்படைப் பிரச்சினையத் தீர்க்கப் போகினம்?'' — இளமை.

''அதுதானே!...... இராணுவத்தின்ர அநியாயத்தில சாகிறதுகள் ஒரு பக்கம். வேறை வழியளாலையும் சாகிற சனங்கள் கொஞ்சமே?''

''எங்களைப் போல கிழடு கட்டையள் மட்டுமே; இளசுகள், பொம்பிளையள், கெற்பனியள், குழந்தை குஞ்சுகள்......... ச்சு......... எண்ணிமாளாது!''

''நேற்று பேப்பரில பாத்தியளே? சாவகச்சேரியில இருதய நோயால பாதிக்கப்பட்ட ஆக்களில எண்பது வீதம் சைக்கில் விறகு வியாபாரியளாம்! கொஞ்ச நஞ்சப் பேரே தொழில்வாய்ப்பை இழந்து அல்லல் படுதுகள்?''

''ஆசுபத்திரியளில போதிய மருத்துவ வசதியில்ல. மருந்துகளுக்கும் தடை. கேள்விப்படாத புதுப்புது பயங்கரவியாதிகளும் வேறை. இதுவும் கூட திட்டமிட்ட இன அழிப்புத் தான்!''

புறப்பட்டு விட்டார்கள்.

நினைவுக்கு வந்தது. போராளியின் நாட்குறிப்பில் இருந்தது: ''பூக்களா சொரிகின்றன? கொடும் குண்டுகளல்லோ பொழிகின்றன உங்கள் பீரங்கியின் வாயிலிருந்து! அதனூடு எப்போது வெள்ளைப் புறாக்களை அனுப்பப் போகிறீர்கள்? இல்லாவிடில் உங்கள் மீதான நம்பிக்கையை எங்கள் மீது கட்டியெழுப்புவது உங்களுக்கு இயலாததே!

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

# நேர்காணல்

பொ. தாசன்

# நேர்முகம்

கருணாகரன்

● குறுகிய காலத்தில் பலராலும் பேசப்படும் ஒருவராகிவிட்ட தங்களின் வாழ்க்கைப் பின்புலத்தையும் கலைத்துறையில் தாங்கள் நடந்து வந்த பாதையையும் வெளிச்சம் வாசகருக்கு அறியத்தாருங்கள்:



□ நான் மட்டக்களப்பு –வாழைச்சேனையில் 05.08.1961 ல் பிறந்தேன். எனது தந்தையார் காங்கேசன்துறையைச் சேர்ந்தவர். தாயார் வாழைச் சேனையைச் சேர்ந்தவர். தந்தை, அரசினர் வைத்தியசாலையில் 'கங்காணி'யாக வேலைசெய்தார். எங்கள் குடும்பத்தில் என்னுடன் ஏழுபேர். அதில் நான் ஐந்தாவது. என்மூத்த தமயனார் கணேஸ் – இவர்

மட்டக்களப்பு, வாழைச்சேனையைச் சேர்ந்த திரு. பொ. தாசன் வழி வழியாக வந்த ஒரு கலைக் குடும்பத்தைச் சேர்ந்தவர். எம் மண்ணில் அண்மையில் உருவாக்கம் பெற்ற வண்ணப்பட ஒளிப் பேழைகளான (வீடியோ படங்கள்) தமிழோசை, இது எங்கள் தேசம், தாயகக் கனவு, சின்னவிழிகள், இன்னும் ஒரு நாடு, உயிர்ப்பூ ஆகியவற்றின் நெறியாளர் ஆவார். இயல்பான கலையுள்ளமும், புதியன தேடும் ஆர்வமும், சாதிக்க வேண்டுமென்ற முனைப்பும் கொண்டவர். தமிழீழத்தின் எதிர்காலச் சினிமாவின் வளர்ச்சிக்கு இவர் பெரும் பங்காற்றுவார் என நம்பப்படுகிறது. போராட்டத்தின் மீதும், போராளிகள் மீதும் இறுக்கமான பிணைப்பைக் கொண்டுள்ள இவர் சிறுகதைகள் சிலவற்றை எழுதியுள்ளதுடன், மேடை நாடகங்களிலும் அதிகளவு கவனம் செலுத்திவந்துள்ளார். இவரிடம் தமிழீழக் கலையுலகம் நிறையவே எதிர்பார்க்கிறது.

'இன்னும் ஒரு நாடு' படத்தில் தேனீர்கடை உரிமையாளராக நடித்து மக்கள் அபிமானம் பெற்றவர். ஏனைய சகோதர, சகோதரிகளும் கலைஞர்களே! நான் இயக்கி வெளிவந்த முதல்படமான 'இதயத்தில் இவர்கள்' என்றபடத்தில் எல்லோரும் நடித்துள்ளனர். குடும்பமே கலையுடன் நெருக்கமாகி இருந்தது. காங்கேசன்துறை, மன்னார் – சிலாவத்துறை, வாழைச்சேனை என்ற இடங்களிலெல்லாம் எனது படிப்புத் தொடர்ந்தது. சிலாவத்துறையில் நான்காம் வகுப்புப் படிக்கும்போது 'பத்தினித் தெய்வம்' என்ற நாடகத்தில் ஒருபாத்திரமேற்று நடித்தேன். அதுதான் என் முதல்கலை அனுபவம். பிறகு, வாழைச்சேனையில் பதினாறு, பதினேழு வயதில் நானே நாடகங்களை எழுதி, நெறிப்படுத்த ஆரம்பித்தேன். இதற்கு பருத்தித்துறை வடமறவர் கலைக்கூடத்தைச் சேர்ந்த எனது சிறிய தந்தையான ஜே. ஏ. அருள்தாசன் அவர்கள் துணைபுரிந்தார். நாடகத்துறையில் தீவிரநாட்டம் கொண்டதால் எனது வாழ்க்கையின் பின்புலம் சகல வழிகளாலும் பாதிக்கப்பட்டது. என்றாலும் எனது தாயாரின் ஒத்துழைப்பும் ஊக்கமும் என்னை இத்துறையில் வெகுஆர்வமுடன் ஈடுபட வைத்தது. 1983ம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரத்தின்போது சகோதரர்கள் இலங்கை இராணுவத்தால் தேடப்பட்டனர். ஆகவே வாழைச்சேனையில் இருந்து பருத்தித்துறைக்கு வரவேண்டியதாயிற்று. பருத்தித்துறையில் 'நாதன் வீடியோ சென்ரரில்' உள்ளூர் தொலைக்காட்சி சேவை நடத்தும் வாய்ப்புக் கிடைத்தது. இங்கேதான் சினிமா சம்பந்தமான விடயங்களை அறிந்துகொண்டேன். அப்போது குடத்தனை 'பொற்பதி கலைஞர்களை'க் கொண்டு 'இலட்சிய வேங்கை' என்ற வீடியோ படத்தை இயக்கினேன். அது பணப்பற்றாக்குறையால் பாதிகடந்துவிட்ட நிலையில் நின்றுவிட்டது. 87ம் ஆண்டு 'லிபரேசன் ஒப்பரேசன்' இராணுவ நடவடிக்கையால் முல்லைத்தீவுக்கு இடம்பெயரவேண்டியேற்பட்டது. அப்போதுதான் முல்லைத்தீவுக் கலைஞர்களையும் என்னுடைய சகோதரர்களையும் கொண்டு 'இதயத்தில் இவர்கள்' 'வாழ்த்துங்கள்' ஆகிய படங்களைத் தயாரித்து இயக்கினேன். இவை இரண்டும் தொழில்நுட்பரீதியாகவும், இயக்குநரிலுள்ள அனுபவக்குறைபாடுகள் காரணமாகவும் தோல்விகண்டன. பிறகு, விடுதலைப்புலிகள் கலை,பண்பாட்டுக்கழகத்துடன் தொடர்பேற்பட்டது. என்னுடைய கலைவளர்ச்சியில் பல மாறுதல்களும், உயர்ச்சியும் காணத்தொடங்கியது. 'வெளிச்சம்' இதழில் 'மீண்டும் ஒருபாடம்' என்ற சிறுகதையை எழுதினேன். தொடர்ந்து முல்லை மாவட்டத்தில் 'வைகறை' என்ற தட்டச்சுச் சஞ்சிகையையும்' 'ஊடகம்' என்ற கையெழுத்துச் சஞ்சிகையையும் வெளிக்கொணர்ந்தேன். இதன் பின்னர்தான் 'தமிழோசை' என்கின்ற படத்தை நெறிப்படுத்தினேன். அது வெற்றிபெற்று, எமது தேசியத்தலைவரைக் காணும் அளப்பரிய பாக்கியத்தைத் தந்தது.

● தென்தமிழீழத்தின் மட்டக்களப்பைச் சேர்ந்த தாங்கள் ஆரம்பத்தில் எமக்கு ஒரு இலக்கியக் காரனாகவே

தோற்றம் தந்தீர்கள். இன்று வீடியோக் கலைத்துறைக்குள் நுழைந்து கணிசமான வெற்றி பெற்றுள்ளீர்கள். இந்தப் பாய்ச்சல் எவ்விதம் உங்களில் நிகழ்ந்தது?

☐ தமிழீழத்தில் எல்லாத் துறைகளும் வளர்ச்சிகண்டுவரும் நிலையில் திரைப்படத்துறை பூஜ்ஜியமாகக் காணப்பட்டது. விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம் இந்தத் துறையின் வளர்ச்சிக்கு பெரிதும் முயற்சியெடுத்தது. ஆனால் இந்தத் துறையுள் நுழையப் பலர் ஆரம்பத்தில் தயக்கம் காட்டினர். ஒரு சிலர் முயற்சியிலீடுபட்டனர். இந்த வேளை முல்லைமாவட்ட விஷேட தளபதியாயிருந்த லெப் – கேணல் அன்பு அண்ணா, மாவட்டதளபதி பாண்டியன் அண்ணா, முல்லைமாவட்ட கலை, பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் சங்கர் அண்ணா போன்றோரின் ஊக்கம் கிடைத்தது. முயற்சியில் இறங்கினேன்.



● தமிழோசை மூலம் அறிமுகமாகி உயிர்ப்பூ வரையிலான தங்களது கலைப்படைப்பாக்கங்கள் மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட அனுபவம், வளர்ச்சி, தேடல் என்பனபற்றிச் சொல்லுங்கள்.

☐ தமிழோசை படம் எடுக்கும்போது அது இலகுவாகவே பட்டது. காரணம், அப்போது ஒலி, ஒளி பற்றிய போதிய அறிவு எனக்கிருக்கவில்லை. உயிர்ப்பூ படம் எடுக்கும்போது நிறையக் கஸ்டமாக இருந்தது. ஏனெனில் ஒலி, ஒளி என்பன இப்படித்தான் இருக்கவேண்டும். இப்படி வந்தால் நன்றாகவிருக்கும் என்ற தவிப்பு இருந்தது. இவற்றையெல்லாம் இந்த இடைவெளியில் அனுபவரீதியாக அறியக்கூடியதாக இருந்திருக்கிறது. எனவே இவற்றிலெல்லாம் கூடிய கவனம் எடுக்கவேண்டியேற்பட்டது. ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு போன்றவற்றில் இன்னும் எனது தேடல் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

● திரைப்படம் என்ற வடிவமும் வீடியோ படம் என்ற வடிவமும் வெவ்வேறானவை. இந்த இரண்டு வடிவங்களையும் நீங்கள் இனங்கண்டிருப்பீர்கள். எமது மண்ணில் இன்று வளர்ச்சி கண்டுவரும் வீடியோகலை வடிவத்தையும் வரவுள்ள திரைப்பட வடிவத்தையும் கருத்திற் கொண்டு இரண்டின் வேறுபாடு, பயன்பாடு, புரிந்துகொள்ளல் என்பவற்றைக் கூறுங்கள்:

☐ திரைப்படத்தையும் வீடியோ படத்தையும் வெவ்வேறு கோணத்தில் பார்க்க

பிரம்மஞானி எழுதும்
**'அபத்தமும் அர்த்தமும்'**
தொடர் கட்டுரை
அடுத்த இதழில்
தொடரும்.

வேண்டும். பெரியதிரை, சின்னத்திரை என்று வகைப்படுத்த வேண்டும். இப்படி வகைப்படுத்தி சின்னத்திரைக்கென்று ஒரு யுக்தியை ஏற்படுத்தியபடியால்தான் என்னால் இந்தப்படங்களை இயக்கமுடிந்தது. திரைப்படம் (பெரியதிரைக்கானது) வீடியோ படம் (சின்னத்திரைக்கானது) இவற்றுடன் வீடியோ நாடகம் (டெலிராமா) இவை மூன்றையும் மூன்று வடிவத்தில் கொள்ளவேண்டும். திரைப்படம் வேகமானதாகக் காணப்படும். வீடியோ நாடகம் (டெலிராமா) வேகம்குறைவாகக் காணப்படும். வீடியோ படம் இந்த இரண்டுக்கும் இடைப்பட்டதாக இருக்கும். வேகமாகவும் இருக்காது, வேகம் குறைவாகவும் இருக்காது. இதனால் நாங்கள் அமைக்கும் திரைக்கதையை வீடியோ படத்திற்கு ஏற்றவாறுதான் அமைக்கவேணும். திரைப்படத்தை மனதில் நிறுத்திக்கொண்டு திரைக்கதையை அமைக்கக்கூடாது. திரைப்பட ஒளிப்பதிவுக் கருவிகள் வேகமாக இயங்கக்கூடியன. இதற்கு கிறேன் (உயரவண்டி) ட்ரொலி (நகரும் வண்டி) போன்றவை இன்னொருவிதத்தில் உதவுகின்றன. இதற்குத் தக்ககடி 'லைற்றிங்' கையும் அமைப்பார்கள். திரைப்படத்துக்கு எத்தகைய கதைகளையும் புனையலாம். கதாசிசியரின் கற்பனை எதையும் படமாக்கிவிடமுடியும். நவீன கருவிகள் மேலதிகமாக துணைபுரிகின்றன. ஆனால், வீடியோ படத்தில் நாம் நினைத்ததையெல்லாம் இப்போது செய்துகாட்ட முடியாது. நமக்கு எல்லாவளங்களும் கிடைக்கும்பொழுது நாம் மாறிக்கொள்ள முடியுமென நினைக்கிறேன். அதுவரை வீடியோபடம் எடுக்கவேண்டும் என்ற முயற்சியில் ஈடுபடுகிறவர்கள் - கதாசிரியர்கள் - எம்மிடமுள்ள கருவிகள்பற்றி தெரிந்துகொள்ள வேண்டும். இந்தக் கருவிகளில் எதைச்சாதிக்க முடியும்? எதைச் சாதிக்க முடியாது? என்பதை வகைப்படுத்திக்கொள்ள வேண்டும். பொதுவாக கதை அமைப்பவர்கள் எம்மிடமுள்ள வசதிகள், சாதனங்களை மனதில்கொண்டு எழுதினால் படம் இயங்குவது எளிதாக இருக்கும்-

● எமது போராட்ட நிகழ்வுகளை வெற்றிகரமாக கலைப்படைப்பாக்கி வரும் தங்களின் எதிர்காலக் கனவு என்ன?

☐ பெரிய திரைப்படம் ஒன்றை இயக்க வேண்டும். இந்தப் போராட்டத்தை அந்தத் திரையில் வெளிப்படுத்த வேண்டும்.

● நல்ல நடிகர்கள், தொழில்நுட்ப வியலாளர்கள், சினிமாத்துறையுடன் இணைந்த மற்றும் கலைஞர்கள் இங்கே இல்லையென்றும். அதனால் ஒரு நல்ல படத்தை எடுப்பதற்கு சிரமம் நிறைய உண்டு என்றும் சொல்லப்படுவதுண்டு. இதுபற்றி உங்கள் கருத்தென்ன?

□ திரைப்படத்துறையுடன் இணைந்த தொழில்நுட்பக் கலைஞர்கள், நடிகர்கள் இல்லையென்று சொல்லமுடியாது. நிறைய அனுபவம் இல்லையென்றாலும் ஓரளவுக்கு அனுபவமுள்ளவர்கள், நிறையவும் ஆற்றலுள்ளவர்கள் இங்கே இருக்கிறார்கள். இவர்களெல்லாம் இலைமறைகாயாக இருப்பதால் நாம் இவர்களைக் கண்டுபிடிப்பது கஸ்டம். தாமாக முன்வருவார்களானால் நமது துறைக்குப் பயனுள்ளதாக இருக்கும்.

● சர்வதேசத் தரத்துக்கு எமதுபடங்கள் வளர்ச்சியடையும் என்று நீங்கள் கருதுகிறீர்களா? கருதுவதானால் அதற்கான காரணமென்ன?

□ இப்பொழுது எமது படங்கள் சர்வதேச தரத்திற்கு, அதாவது சர்வதேச போட்டிகளுக்கு செல்லக்கூடிய அளவுக்கு தோற்றம் கண்டுவருகின்றன. இங்கே உருவாகும் படங்கள் செயற்கைத் தன்மையில் அமையாமல், இயற்கையான காட்சிகள், சூழல், இயல்பான நடிப்பு என்பவற்றால் மனித வாழ்க்கையை வெளிப்படுத்துகின்றன. போராளிகளின் அதியுன்னதமான தியாகத்தை யதார்த்தமாகச் சித்தரிக்கின்றன. பொதுவாக உண்மையே சொல்கின்றன. இதனால் என்னுள் ஒரு நம்பிக்கைஏற்படுகின்றது. எதிர்காலத்தில் எமக்குப் போதியளவு கருவிகள் கிடைக்கும் போது எமது படங்களும் சர்வதேசத் திரைப்படப்போட்டியில் கலந்துகொள்ளும் தகுதிபெறும். இதனை தென்னிந்திய பிரபல கலைஞர்கள் சிலர்கூட ஒப்புக்கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

● கருவிகள் மட்டும் நல்லபடத்தை எப்படித்தரமுடியும்?

□ கரு நிறையவுண்டு. கருவிகள்தான் இல்லையென்கின்றதே ஆதங்கம். இங்குள்ள இத்துறைசார்ந்த எல்லாக்கலைஞர்களின் நிலையும் இதுதான். இன்று விஞ்ஞானரீதியாக தொழில்நுட்பம் முன்னேறிவிட்ட நிலையில் நாங்கள் சாதாரண வைபவங்களுக்கு பயன்படுத்தப்படும் கருவிகளைக்கொண்டே இப்படைப்புகளை உருவாக்குகிறோம். இதனால் கூடுதலான நேரம் வீணாகிறது. எங்களுக்குள் புதைந்து கிடக்கும் எல்லாவற்றையும் வெளிக்கொண்டுவர முடியாதவாறு காலமும் பின்தள்ளிப் போகிறது.



● இங்கே வெளிவந்துள்ள நீளப் படங்களுடன் ஒப்பிடும்போது குறும் படங்கள்பல குறிப்பிடக்கூடிய அளவுக்கு வந்துள்ளன. இது பற்றி என்ன சொல்கிறீர்கள்?

☐ முழுநீளப் படமென்றாலும்சரி, குறும்படமென்றாலும் சரி கலையின் கரு இவ்வளவு என்கின்ற அளவுதான் இருக்கும். ஒரு முழுநீளப்படத்தை படைத்தே தீரவேண்டுமென்று தேவையற்ற காட்சிகளை திணிப்பதன் மூலம் மக்களின் விசனத்துக்கு உட்படவேண்டியதாகிறது. குறும்படங்கள் ஒரு அளவுக்குள் அடக்கமாக நின்றுகொள்கிறபடியால் அது மக்களின் மனதைத் தொட்டுவிடுகிறது. நல்ல விமர்சனங்களும் கிடைக்கிறது.

● **உங்களின் படங்கள் பற்றிய விமர்சனங்கள் உங்களுக்குக் கிடைக்கின்றனவா? அப்படியாயின் அவை உங்களை ஊக்கப்படுத்துகின்றனவா? தாக்கத்தை ஏற்படுத்துகின்றனவா?**

☐ வெளிநாடுகளிலிருந்து கடிதமூலமே கிடைக்கின்றன. இது எம்மை ஊக்கப்படுத்துகிறது. இங்கே அநேகமாக நேரடியான விமர்சனமே கிடைக்கிறது. பலர் சரியான விமர்சனங்களை முன்வைக்கிறார்கள். நாம் விடும்தவறு, ஒரு காட்சியின் அமைவு, தரம், இன்னும் பல விடயங்களை அவர்கள் சொல்லும்போது மகிழ்ச்சியாக இருக்கிறது. ஒரு சிலர் அர்த்தமில்லாத கருத்துக்களைக் கூறுவார்கள். ஏதோ தாங்கள் பிழை பிடித்து விட்டோம்— கெட்டிக்காரர் தாமே — என்ற கனவில்— நினைவில்— நனைகிறார்கள். நான் எல்லாவற்றையும் நன்றாக அவதானித்து வைத்திருக்கிறேன். இரண்டாவது வகையினரின் விமர்சனங்கள் என் ஊக்கத்தைக் குறைக்கவில்லை. மாறாக ஒரு உந்துதலை, ஒரு விதமான சவாலையே தருகின்றன. என்னுடைய ரசிகர்கள் இவர்களுக்குரிய பதிலை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். ☐☐


**சுத்தம் சுகம் தரும்**
**சுவை தரும் சாலினி**

பாண்... இவை
தரமானவை

பணிஸ்... இவை
நம்பகதன்மை உடையவை

கேக்... இவை
பாதுகாப்பானவை

சுவைமிக்கபிஸ்கட்... இவை
நியாய விலையில் உள்ளவை

**அனைத்தின் உருவாக்கம்**

விபரங்கட்கு:

**சாலினி வெதுப்பகம்**
**115, இராமநாதன் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

# ஊருக்குத் திரும்புதல்



**புதுவை இரத்தினதுரை**

*கால்களில் வேகம் பூட்டி;*
*காற்றாய் விரைவோம்.*
*மகளே!*
*கால்கள் வலிக்கிறதா?*
*கலங்காதே.*
*ஊருக்குத் திரும்பும் மகிழ்ச்சியில்*
*தூரம் குறுகிவிடும்.*
*இன்னும் சொற்ப தூரம்தான்.*
*மகளே எட்டிநட.*
*எம்மைப் பிடித்த பீடையொழிந்தது.*
*இருட்டு அழிந்தது.*
*எங்களூரில் வேர்விட்டிருந்த;*
*கள்ளியும், நாகதாளியும்*
*இல்லாதழிந்தனவாம்.*
*நெருஞ்சியும், நாயுருவியும்*
*நீறாகிப் போயினவாம்.*
*இனித் தென்றல் வந்து*
*தோளிலேறி விளையாடும்.*
*மேச்சல் முடிந்து வீடுதிரும்பும்*
*மாடுகளின் மகிழ்ச்சியல்லவா எமக்கு?*
*மகளே!*
*நின்று; விழிகளைத் தூரவீசு.*
*அந்தோ ஊரின் எல்லை தெரிகிறது.*
*அந்த வயல்வெளிகளைக் கடந்து விட்டால்*
*அதற்கப்பால் .. பனைக்கூடல் ஒன்றுவரும்.*
*அதையும் கடந்து நடந்தால்........*

மணிப்புறாவும், ஆட்காட்டியும்,
கௌதாரியும் குடியிருக்கும்
பரந்தவெளி விரிந்து கிடக்கும்.
அதையும் கடப்போம்
அதற்கப்பால்.........
வெள்ளைமணல் விரித்த கடற்கரை வரும்
ஈரம் சுவறிய கரையின் மீது
பாதம் நனைய நடந்து போனால்......
'பூதவராயர் கோயில்' வரும்
அந்தக் கோயிலின் பக்கமாகவே
முன்னரெம் குடியிருப்புக்கள் இருந்தன.
மகளே!
அப்போது உனக்கு இரண்டு வயது
திடுமென ஒருநாள்
எங்களுருக்கு "இயமன்" வந்தான்
அவனோடு ஆயிரம் "கிங்கரர்" வந்தனர்.
ஊர்முழுதும் தீக்குளித்தது.
எண்ணையூற்றி எரித்ததால்.......
ஊரின்முகம் கருகிப் போனது.
வீடு – வயல் – தோட்டம் - துரவு
கோயில் – பசு - கன்று - மரங்கள்
ஆண்கள் - பெண்கள் - சிறுவர் - கிழடுகள்
எல்லாமே எரிந்து போயின.
கோயிற் கிணற்றில்
தண்ணீரள்ளப்போன
உன்தாயும்
நெசவடிக்கப் போன உன் அக்காவும்
அன்று வீடு திரும்பவில்லை.
மீண்டும் வரவேயில்லை.
அன்று
உன்னை வாரியெடுத்து ஓடிவந்தேன்.
அதன்பிறகு இன்றுதான் வீடு திரும்புகின்றோம்.
மகளே! எங்கள் வீடு
பத்து வருடங்கள் நாங்களிருந்த
அகதிமுகாம் போன்றதல்ல.........
மகளே! அது அழகான வீடு.
அத்திவாரத்திலிருந்து கோப்பிசம் வரையும்

என் வியர்வையில் நனைந்தவீடு.
முற்றத்தில்.........
உன் அக்கா வளர்த்த பூங்கன்றுகளின்
முகங்கள் தினசரி சிரிக்கும்.
விதம், விதமான நிறங்களில்
கொள்ளையழகு குடியிருக்கும்.
கிணற்றடியில்
செவ்விளனீர்க் கன்று குலைதள்ளியிருக்கும்
வீட்டுக்குப் பக்கத்தில் இரண்டு வேப்ப மரங்கள்
தலையாட்டிச் சுகம் கேட்க
ஜில்லென்று காற்று வீசும்.
குயில்கள் வந்திருந்து கூவும்.
மைனாக்கள் ஏதேதோ பேசும்.
உன் வீடு அழகானதென்பதை
பார்த்ததும் ஏற்றுக்கொள்வாய்.
மகளே!
ஐயோ என்மகளே!
பூதவராயர்கோவிலைக் காணவில்லையே
என்னயிது?
பூமி பிளந்து என்னை விழுங்குகிறதா?
மகளே!
இதுதான் எங்கள் வீடிருந்த இடம்.
இங்கேதான் அந்த வேப்பமரங்கள் நின்றன.
அப்போ எங்கள் வீடு எங்கே?
என் மனைவி எங்கே?
உன் உடன்பிறப்பு எங்கே?
பன்னிரண்டு வயதான
என் சின்னமகளே!
விடுதலைக்கு நாங்கள்
பெரிய விலை கொடுத்துவிட்டோம்
வா மகளே!
இந்த இடத்தில்
இனியொரு கொட்டில்கட்டிக் குடியிருப்போம். □□

---

தமிழீழக் கல்வி மேம்பாட்டுக்கு தன்னலமற்ற சேவையாற்றி எம் மண்ணின் விடுதலைக்கான போராட்டத்துக்கு தன்னால் முடிந்தளவு பங்களிப்புச் செய்து. நல்லன நடைபெறும் இடமெல்லாம் தேடிச் சென்று பணி புரிந்தும் தம் உடல்நலக் குறைவைக் கூடக் கருத்திலெடுக்காது ஓய்வின்றிச் சுழன்ற யாழ். பிரதிக்கல்விப் பணிப்பாளர் கவிஞர். இ. சிவானந்தன் அவர்களின் மறைவுக்கு அஞ்சலிப் பூக்களைக் காணிக்கையாக்கித் தலை வணங்கி நிற்கின்றோம்.

— வெளிச்சம்

*சிறுகதை*

செங்கை ஆழியான்

# அந்தக் கரங்களை எந்தக் கங்கையில் கழுவுவார்

இராணுவ ட்றக்குகளின் சத்தம் வெளியில் தொடர்ந்து கேட்டது. எங்கிருந்தோ ஓர் இராணுவ அணி மாற்றம் பெற்று இங்கு வந்திருப்பது போலத் தெரிந்தது. எந்த றெஜிமென்டோ? எந்தப் பட்டாளமோ?

சுவாமிநாதன் யன்னல் ஊடாக வெளியில் பார்த்தான். அவனது அரசவிடுதியைச் சுற்றியுள்ள ''ட'' வடிவ வீதியில் 'சக்திமன்' டிறக்குகள் தொடராக நின்றிருந்தன.

நேரம் நள்ளிரவைத் தாண்டியிருக்கும்.

இது வழக்கமான நிகழ்வுகள்தான். யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவுக்கோ வவுனியாவுக்கோ இடம் மாறும் இந்திய இராணுவ அணிகள் கிளிநொச்சியில் ஓரிரவு தங்கிச் செல்வது வழக்கமாகிவிட்டது. அவனது அரசவிடுதியின் முன் அடர்ந்து கிடந்த பற்றைக்காட்டை வெட்டிச் சீர்படுத்தி அவர்கள் பெரியதொரு இராணுவ முகாம் ஒன்றினை அமைத்திருந்தனர். சுற்றிவர அமைந்த சென்றிகளில் ஒன்று அவனது விடுதியை நோக்கியும் இருந்தது. அதற்குள் நிற்கும் சீக்கியச் சிப்பாய் ஒருவன் எப்பொழுதும் அவர் விடுதியை நோக்கித் துப்பாக்கியை நீட்டி வைத்துக்கொண்டு நிற்பான்.

அந்தப்பெரிய இராணுவ முகாமின் அருகில் அரசவிடுதிக்கட்டிடம் ஒன்றிருப்பதும் அதற்குள் அப்பிரிவின் சப் கலெக்டர் என்ற உதவி அரசாங்க அதிபர் ஒருவர் இருப்பதும் ஆரம்பத்தில் அந்த முகாம் அதிகாரிக்குப் பிடித்தமாக இருக்கவில்லை. எனினும் ஓர் உயர் அதிகாரியை அவ்விடத்தைவிட்டு அகற்றுவதில் ஏற்பட்ட தயக்கம் அவரைத் தொடர்ந்து அங்கிருக்க வைத்து விட்டது.



சுவாமிநாதன் தூக்கம் கலைந்து யன்னலூடாகப் பார்த்துவிட்டுத் திரும்பிப் படுத்தபோது, விடுதிக் கதவை யாரோ தட்டினார்கள்.

''சார்...... சார் ....''

அழைத்த குரலிலிருந்து அது கணபதிக்குரியது என்பதைச் சுவாமிநாதன் புரிந்துகொண்டான். இராணுவ முகாமின் சார்ஜன் திருச்சியைச் சேர்ந்தவன். அங்கு மொழிபெயர்ப்பாளனாகக் கணபதிதான் விளங்கினான்.

சந்தேகத்தின் பெயரில் கைதாவோருக்கும் விசாரணை செய்யும் அதிகாரிக்குமிடையில் கணபதிதான் இணைப்பாளன். சுவாமிநாதன் அலுப்புடன் எழுந்து கதவைத் திறந்தான்.

''மன்னிச்சுக்கொள்ளுங்க சார். முல்லைத்தீவிலிருந்து மேயர் அருண் வந்திருக்கிறார். அவரு

டைய குறாப்புகளோடு. மேயர் தங்குவதற்கு எங்களுடைய காம்பில் வசதி காணாது. யாப்னாவிற்குப் போகிறார். இன்றிரவு மட்டும் உங்கள் முன்னறையில் தங்கட்டும். சார்.''

''சரி...'' என்றான் சுவாமிநாதன். முன்னரும் சில இராணுவ அதிகாரிகள் அந்த அறையில் தங்கிச் சென்றுள்ளனர். அரச விடுதியின முன்னறை எப்பொழுதும் விருந்தினர் தங்கத் தயாராகவிருந்தது. கணபதிக்கு அது தெரியும்.

அவரது விடுதியின் கிணற்றினை இராணுவத்தினரின் ஒரு பகுதியினர் பயன்படுத்தினர். ஒரு 'பக்கட்' நீரில் அவர்கள் தம்மைச் சுத்தம் செய்து கொள்வார்கள். அவ்வளவுக்குத்தான் கிணற்று நீர் போதும். ஒரு கிணற்றை நூற்றுக்கு மேற்பட்டோர் உபயோகித்தால் ? அவர்கள் அதிகாலையிலேயே கிணற்றடிக்கு வந்துவிடுவார்கள். அவர்கள் சென்றதன் பின்னர் கிணற்றினைப்பார்க்கில் அது வரண்டிருக்கும். நீர் மீண்டும் ஊறுவதற்காகக் காத்திருக்க வேண்டும்.

''யூ ஆர் சுவாமிநாதன் ..... தி சப் கலெக்டர்......?'' உச்சரிப்பும் உருவமும் கம்பீரமானவை.

''யேஸ் மேஜர் .....''

''ஐ ஆம் அருண்...''

சுவாமிநாதன் சற்று வயதான ஒருவரையே எதிர்பார்த்தான். ஆனால் வந்தவன் இளைஞனாகவிருந்தான். சுவாமிநாதனிலும் பார்க்க வயதிற் குறைந்தவன். முதிரா இளமை அவனில் தெரிந்தது. உயர்ந்த தோற்றம். சிவந்த காட்சி தந்தான்.

''நான் சிரமம் தருவதற்கு மன்னிக்கவேண்டும். ஓரிரவு உங்கள் விடுதியறையில் தங்கிச் செல்கிறேன்.'' என்றான் சிரிப்புடன்.

சுவாமிநாதன் தலையை ஆட்டினான். அரசவிடுதியைச் சுற்றி 'சென்றி'கள் அமைக்கப்பட்டன. சில நிமிடங்களில் அனைத்தும் தயார். மேஜர் அருணின் பொருட்கள் முன்னறையில் சேர்க்கப்பட்டன.

மறுநாள் அதிகாலை. சுவாமிநாதன் அறையை விட்டு எழுந்து வந்தபோது விறாந்தையில் மேஜர் அருண அமர்ந்திருந்தான். வெண்ணிற சோர்ட்ஸ், ரீசேர்ட் அணிந்திருந்தான். சற்று முன் வெளியில் 'ஆரோக்கிய ஓட்டம்' சென்று வந்த களைப்புத் தெரிந்தது. முகத்தில் வியர்வைத் துளிகள்.

''வாங்க சுவாமிநாதன்... எங்கள் ஊரில் சுவாமிநாதன்கள் அதிகம். ரொம்ப அதிகம் .....'' தமிழில் பேசியபோது அவன் சற்றுத்திகைத்துவிட்டான். அவன் வடநாட்டுக்காரனாக இருப்பானென்று எண்ணியிருந்தான். அவனின் திகைப்பைப் புரிந்து கொண்டவன் போல அருண், ''நான் மட்ராஸ்... ஆவடி ....'' என்று சிரித்தான்.

''அப்படியா?''

சுவாமிநாதன் அவன் பக்கத்திலிருந்து கதிரையில் அமர்ந்துகொண்டான்.

''ஏன் எங்களுக்கெதிராக எல்ரிரியினர் ஆயுதம் எடுத்தனர்?''

அவ்வேளை ஒரு ஜவான் 'றே' ஒன்றில் ஆவி பறக்க கோப்பி கொண்டு வந்தான். அவர்களிடம் நீட்டினான். சுவாமிநாதன் தயங்கியபோது ''எடுங்களேன். ரேக் இற்... நாங்கள் சயனைற் போடமாட்டோம் ......'' என்றான் அருண். அவன் வார்த்தைகள் சுவாமிநாதனுக்கு வியப்பைத் தந்தன. ஏன் அப்படிச் சொன்னான்?

சுவாமிநாதன் கோப்பிக் கோப்பையை வலக் கரத்தில் எடுத்துக்கொண்டான். அருண் மீண்டும் கேட்டான் இக்கேள்வியை அவனிடம் பலர் கேட்டிருக்கிறார்கள். சாதாரண ஜவானிலிருந்து உயர் இரா

ணுவ அதிகாரிகள் வரை அவனிடம் இக்கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள்.

இதற்கு விடை இலகுவிற் கூறிவிடமுடியும்: ''தமிழ் மக்களைப் பாதுகாப்பதாகக் கூறிக் கொண்டு அமைதி பேண வந்த நீங்கள் மக்களுக்கு எதிராகவே ஆயுதம் ஏன் தூக்கினீர்கள்? உங்களால் சுட்டு வீழ்த்தப்பட்ட அப்பாவி மக்கள் உங்களிடம் என்ன கேட்டார்கள்? நான் காண்டுகள் சிங்களப்படையிடம் நாங்கள் அனுபவித்த துயரங்களை நான்கு நாட்களில் உங்களிடம் அனுபவித்தோம்''

இவற்றைக் கூறுவதனால் பயனில்லை.

கூறுவதாயின் இன்னமும் கூறலாம்:

''எவ்வளவு உயிர்கள் எவ்வளவு சொத்துக்கள்? வீதியோரங்களில் சுடப்பட்டுக் கிடந்த சடலங்கள் எத்தனை? மரணம் கூட அங்கு கௌரவமாக இருக்கவில்லை. காகங்களும், நாய்களும் பிய்த்துப்பிடுங்கின. வீதியோர வேலிகளைப் பிடுங்கி அதிகாரி என்ற வகையில் எத்தனை சடலங்களை நாங்கள் தகனம் செய்தோம். நாடே சுடுகாடாகவிருந்தது. கொக்குவிலில் அகதிகள் தங்கியிருந்த மாடிக்கட்டிடத்தை ஏன் தகர்த்தீர்கள்? கல்லூரி விளையாட்டு மைதானத்தில் ஆழக்குழிதோண்டி அறுபது சடலங்களை விறகுகளாக அடுக்கிப்புதைக்கவா? இவர்கள் எல்ரிரியினரா? ஆயுதம் எடுத்தவர்களோடு போராடுவதைவிடுத்து அப்பாவி மக்களை ஏன் கொன்றழித்தீர்கள்? மூவாயிரம் பேர் வரை கொல்லப்பட்டனர். இருபதினாயிரம் வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டன. இவையெல்லாவற்றிற்கும் மேலாக உங்களது காமவேட்கைக்கு...... வேண்டாம் அவற்றைச் சொல்ல வேண்டாம்......''

சுவாமிநாதன் இவற்றைக் கூறவில்லை. கூறி என்ன பயன்? புரியாது. புரியாதுதான். யுத்தத்தில் இவை நிகழத்தான் செய்யும் என்பார்களோ? சார்ஜன் கணபதி ஆரம்பத்தில் கூறியவை நினைவு வருகிறது. இந்திய அமைதிப் படையின் முதல் ஆக்கிரமிப்பின் பின்னர் கப்பல் மூலம் காங்கேசன் துறையில் வந்திறங்கிய பட்டாளத்தில் சார்ஜன் கணபதி இருந்தான்.

''என்ன சார், ஸ்ரீலங்கன் ஆமி இவ்வளவு கொடுமைகள் புரிந்திருக்கிறான். வரும்போது வழியெல்லாம் பார்த்தோம். காங்கேசன் துறையிலிருந்து யாழ்ப்பாணம் வரை வீதியோரம் ஒரு வீட்டைக்கூட அழிக்காமல் விடவில்லை. எல்லாம் தரைமட்டம். ஷெல்களினாலும், புல்டோசர்களினாலும் இடித்துத் தள்ளியிருக்கிறார்கள். மனசுக்கு ரொம்ப சங்கடமாகவிருக்கிறது.''

''இல்லை சார்ஜன், அவை ஸ்ரீலங்கா இராணுவத்தால் சிதைக்கப்பட்டவையல்ல. ஐ.பி.கே.எவ்வால் அழிக்கப்பட்டவை...'' என்று கூறிய போது கணபதி அதனை ஏற்கத்தயாராகவில்லை. ஸ்ரீலங்கா இராணுவம் திக்குத்திக்காக விமானக்குண்டுகளால் கட்டிடங்களை அழித்தது. ஆனால் நீங்கள் வரிசையாக யாவற்றையும் அழித்தீர்கள்.

அன்று சார்ஜன் கணபதி அவனைக் கோபத்துடன் பார்த்தான். பின்னர்,

''இப்படிப் பேசாதீங்க பொறுப்பற்று. உங்களுக்குக்கூடாது...'' என்றான்.

''என்ன யோசிக்கிறீர்கள்?'' என்றான் அருண்.

''ஒன்றுமில்லை......''

''நாங்கள் இவர்களுக்கு இரண்டு 'கேஜி மைன்ஸ்' வைக்கச்சொல்லிக் கொடுத்தோம். அவர்கள் 'இருபது கேஜி' வைக்கிறார்கள்...'' என அருண் பெரிதாகச் சிரித்தான்.

''எவ்வளவு அழிவுகள்? சேதங்கள்... சாதித்

தது என்ன? எதுவுமில்லை.''

சுவாமிநாதன் அதற்கும் எதுவித பதிலும் கூறவில்லை.

''யுத்தங்கள் கொடூரமானவை. மனிதகுலத்திற்கு யுத்தங்கள் ஒரு போதும் நன்மை தருவனவல்ல.''

''இதைத்தான் எல்லாரும் கூறுகிறார்கள்.''

''இந்த ஆயுதங்களை மனித குலத்தின் ஆக்கங்களுக்குப்பயன்படுத்தினால் எவ்வளவு நன்மை?''

''யுத்தங்கள் இருப்பதனால்தான் உலகில் சமாதானம் நிலவுகிறது, தெரியுமா?'' என்றான் அருண்.

''அது என்னவோ எனக்குத் தெரியாது, மேஜர்.''

அவர்கள் இருவரும் பலவற்றையும் பேசிக் கொண்டனர்.

''உங்களிடம் ஒன்று கேட்கட்டுமா, மேஜர்?''

அவரை அருண் ஏறிட்டுப் பார்த்தான்: ''கேளுங்கோ......''

''நாங்கள் சயனைற் போடமாட்டம் என்றியளே ..... ஏன்?''

மேஜர் அருணின் முகத்தில் திடீரெனக் கருமை படர்ந்தது. முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டான்.''

''நாங்கள் முல்லைத் தீவில் காம்ப் இட்டிருந்தோம். அங்கு கடும் சண்டை எங்களுக்கும் அவர்களுக்கும் நடந்தது. இரு பக்கங்களிலும் அழிவு. கடைசியாக ஒரு காட்டின் மத்தியிலிருந்த சிறு கிராமம் ஒன்றினை அடைந்தோம். கிராமத்தில் எவருமில்லை. ஒரு வீட்டில் ஒரு பெண் இருந்தாள். அவளால் ஓடமுடியவில்லை.''

அருண் சற்று நிறுத்தி அவனை ஏறிட்டுப்பார்த்தான்.

பின்னர் சிறிய நேரக் கழிவில் தொடர்ந்தான்; ''நாங்கள் சுற்றி வளைத்துக் கொண்டோம். அவள் பயத்துடன் வீட்டினுள் ஒதுங்கி நின்றிருந்தாள். எனக்கு உண்மையில் நல்ல தாகம். தண்ணி கொண்டுவா என அவளைக் கேட்டேன். கலெக்டர் நீங்கள் நம்ப மாட்டீர்கள். அந்தப் பெண் தண்ணீர் கொண்டு வந்தாள். அவள் கரம் நடுங்கியது. நான் வாங்கிக் கொண்டேன். உடன் அருந்தவில்லை. இயல்பான ஒரு எச்சரிக்கை. தண்ணீரை உற்றுப்பார்த்தேன். அதற்குமேல் எண்ணெய்போல களிம்பு மிதந்தது. சயனைற் தான். அந்தப் பெண் துணிந்து அதனுள் இட்டிருந்தாள். தனக்கு எதுநேரும் என்பதை தெரிந்து கொண்டு இட்டிருந்தாள். கோபத்தில் நான் அந்தத் தண்ணீரை அவள் முகத்தில் வீசிவிட்டேன். அவள் ஓடமுயன்றாள். அதற்குள் ஜவான் ஒருவனின் துப்பாக்கி பேசிவிட்டது.''

சுவாமிநாதன் அருணை ஆழமாகப் பார்த்தான்.

''நிச்சயமாகத் தெரியுமா உங்களுக்கு அதில் விசம் இருந்தது?''

''நிச்சயமாக.. தெரியும். அவ்வளவு முட்டாளல்ல.''

சுவாமிநாதனின் முகத்தில் எரிச்சல் படர்ந்தது. எழுந்து உள்ளே சென்றான். திரும்பி வரும் போது அவன் கரத்தில் ஒரு தம்ளர் நிறைய நீர்.

அத்தம்ளரை வாங்கிக் கொண்டான. நீரின்மேல் எண்ணெய் மாதிரி மஞ்சள் நிறக்களிம்பு மிதத்தது.

''வாட் இஸ் திஸ்.... யூ ஓல்சோ வான்ற் ரு கில் மீ, கலெக்டர்?''

''மேஜர் எங்கள் பிரதேச நீர் இப்படித்தான். யாழ்ப்பாணத்து நீர் கல்சியம் கொண்டது. துப்பரவாகவிருக்கும். கிளிநொச்சி, முல்லைத்தீவு நீர் இரும்பு ஒக்சைட் கொண்டது. செந்தகப் பூமி. இப்படித்தான் நீரில் எண்ணெய் மாதிரி மிதக்கும்.''

மேஜர் அருணின் வலக் கரம் நடுங்கியது. தம்ளர் கீழே விழுந்துவிடும்போல நடுக்கம். முகத்தில் வியர்வைத் துளிர்கள் பனித்தன.

''ஓ.. மை கோட்.''

தன் கரங்களில் முகத்தைப் புதைத்துக் கொண்டான். □□

உங்கள் சுமைகள் குறைகின்றன......
வேலைப்பளு நீங்குகிறது......
காலத்திற்கேற்ற சேவை......

- நெல் குற்றவும்
- மாவு அரைக்கவும்
- மிளகாய் திரிக்கவும்

தானியங்கள் திரிக்க அரைக்க நாடுங்கள்.........
நிறைந்த உத்தரவாதம்

# தூர்சயா மில்

சேர் பொன். இராமநாதன் வீதி - கலட்டி - யாழ்ப்பாணம்.

---

என்றும் தரமான எங்கள் கட்டடப்
பொருட்களை பாவியுங்கள்

இரும்புப் பொருட்கள்
பெயின்ற் வகைகள்
இன்னும்
பிளாஸ்ரிக் பொருட்கள்

அனைத்தும் ஒரே இடத்தில்

நாடுங்கள்:

# பாக்கியரத்தினம்

கட்டடப் பொருள் விற்பனை நிலையம்
பிரதான வீதி, சங்கானை.

அழகான கிறில் வேலைகள்
ஆரோக்கியமான வெல்டிங் வேலைகள்
உரமான உருக்கு வேலைகள்

நம்பிக்கை - திறன் - ஆற்றல்
நயத்துடன் செய்திட
உங்கள் நண்பன்

## செல்லப்பா என்ஜினியறிங் வேக்ஸ்

பிரதான வீதி - கிளிநொச்சி.

---

உங்கள் தேவைக்குகந்த.........

- தீராந்திகள்
- நீப்பைகள்
- பலகைகள்
- கதவுகள்
- ஜன்னல்கள்
- சிலாகைகள்

நியாய விலையில் பெற்றுக் கொள்ளவும்......

வேலைத்திட்டங்கள்

- வீட்டுக் கூரை வேலைகள் அனுபவம் வாய்ந்த எமது தொழிலாளர்கள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் செய்யவும்;
- அரிவு வேலைகள் அனைத்தும் நிதானவிலையில் மேற்கொள்ளவும்

அனுபவம் உத்தரவாதம் ஆற்றல்

அனைத்திற்கும் ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.

## லக்ஸ்மி தச்சுத்தொழிற்சாலை

265, பிறவுண் வீதி, கலட்டி - யாழ்ப்பாணம்.

திருமண வைபவங்களா? சிறப்புமிகு விழாக்களா?

- நவீன கமராக்களினால் வீடியோ படப்பிடிப்பு (நீக்கல்)
- புதிய பனசொனிக் AV-ES, NICS மிக்சரால் மிக்சிங்
- படத்தொகுப்பு (எடிட்டிங்)
சிறந்த முறையில் செய்து தரப்படும்

கனவான நினைவுகளை
நிகழ்விலே உங்கள் கண்முன்னே காணுங்கள்.

விபரங்கட்கு:

## பிறேம் ஒளிகானம்

பிரதான வீதி - யோகபுரம்

---

நினைவில் நின்றகலாத மங்கள நிகழ்வுகளை
உங்கள் இல்லந்தோறும் கண்ணுக்கு விருந்தாக்க
அழைக்கின்றார்கள்.

### மயூரிகா ஒளிப்பட நிலையம்

நவீன கமராக்கள் மூலம் உங்கள் விழாக்களை
சிறந்த கலர்படமாக்கிட
உங்கள் நிகழ்வுகள், விழாக்கள் அனைத்தும்வீடியோ படமாக்கிட
என்றும் எமது சேவை உள்ளது.
நிறைவாக நவீனமுறையில் மிக்சிங் செய்து கொடுக்கப்படும்.

விபரங்கட்கு:

## மயூரிகா ஒளிப்பட நிலையம்

மல்லாவி • யோகபுரம்.

சோதியின் வடிவே உங்கள் பிள்ளையார்........

கவர்ச்சியான ஆடைத் திறுசுகளுக்கு
பிள்ளையார் வண்ணச்சோலை

உறுதியான கட்டடப் பொருட்களுக்கு
பிள்ளையார் களஞ்சியம்

மோட்டார் உதிரிப்பாகங்களுக்கு
பிள்ளையார் களஞ்சியம்

தரமான அரிசி வகைகளுக்கு
பிள்ளையார் அரிசி ஆலை

அனைத்துப் பாவனைப் பொருட்களின் களஞ்சியம்

பிள்ளையார் களஞ்சியம்

துணுக்காய் வீதி - யோகபுரம், மல்லாவி.

யாழ்ப்பாணம்
நல்லூர் இ௳ோ நூலகம்.

*புழுதி வயல் விதைத்தெடுத்த*
*பூநகரி மொட்டைக் கறுப்பன்*
*அழகு சுவை மணம் நிறைந்து*
*ஆக்கும் சோறு இன்பமடி!*

**அந்தச் சோற்றைத் தந்தது எது தெரியுமா?**

## கணபதி அரிசி ஆலைதான்!

- நாட்டரிசி
- உடையல் பச்சை
- தீட்டல் பச்சை

**எவ்வகை அரிசியும் அவ்வகைக் கைவண்ணம்.**

**உங்கள் தேவைகளுக்கு வன்னியில் நீங்கள்**
**நாடவேண்டிய நம்பிக்கையான நிறுவனம்.**

# கணபதி அரிசி ஆலை

**இல-24, கனகபுரம்,**
**கிளிநொச்சி.**